# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 80 — 1973 ඔක්තෝබර් 05 වැනි සිකුරාදා — 1973.10.05

80 ஆம் இலக்கம்—1973 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்துவைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தாப்படுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சனாதிபதியின் பிரகடனம் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. | 782 |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | 775 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. .. | — |
| அமைச்சரவை நியமனங்களும் பிறவும் .. | 776 | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| அரசாங்க சேவைக் குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபையின் நியமனங்களும பிறவும் | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 784 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | 776 | மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் .. | — |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் .. | 788 |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. .. | 779 | | |


**கவனிக்க.**—அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கம் (திருத்தம்) சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1973 இன் இல. 457

டி. 1/ஆர். ஈ. சி. ரி./88

**தரைப்படை—நிரந்தரப் படை—அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அரசாணையமர்வுகள்**

கீழ்க்குறிப்பிடப்பெற்ற கனவான்களை 1973, ஒகத்து 15 ஆம் திகதி முதல் தரைப்படையில் நிரந்தரப் படையில் செக்கன்ட்–லெஃவ்ரினன்ற்களாக அரசாணையமர்வு செய்தலையும், அதே திகதியிலிருந்து இலங்கைப் பொறிவலாளர்கள் அணியில் சேவைக்கென அவர்களை நியமித்தலையும் அங்கீகரித்தலில் அதிஉத்தமராம் சனாதிபதி அவர்கள் களிகூர்ந்துள்ளார் :—

திரு. மாத்தறகே தொன் ரவீந்திர பீரிஸ்
திரு. மணமேல்துர ரேஹனவீர த சொய்ஸா
திரு. குருகுலசூரியகே தேவப்பிரிய அசோக்க பெரேரா
திரு. வீரக்கொடிகே ஆனந்த சரத் குமார

அதி உத்தமரின் ஆணைப்படி,

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 21 ந் வ.

10–209—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

1973 இன் இல. 458

எண்:டி./வி.எவ்/51/ஏ.

**தரைப்படை—இலங். தொ. ப.—அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட மாற்றல்**

கீழ்க்குறிப்பிடப்பட்ட அலுவலர், 1973, யூன் 18 ஆம் திகதி தொடக்கம், கப்ரின் மாணிக்கராஜா ஜயகுமார், சி. எஸ். ஆர். அவர்களுக்கு நேரடுத்துப் பின் முதுமுறை வகிக்கும்வண்ணம் இலங்கைச் சிங்கப் பேரணியின் 3 ஆம் (தொண்டர்) பட்டாளத்துக்கு மாற்றப்படுகிறார் :

கப்ரின் மொஹமெட் இஸ்மாயில் மீராசாஹிப் ஃபாறுக், ஜி. டபிள்யூ.

அதி உத்தமரின் ஆணைப்படி,

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973, செத்தெம்பர் 17 ஆம் திகதி.

10–63—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரிசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிபபதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 5 ந் வ.

எல். டபிளியூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

எண் : டி. 42/ஆர். ஈ. சி. ரி.

1973 இன் இல. 459

**இலங்கைக் கடற்படை—அலுவலர்களின் நியமனங்கள்**

இலங்கைக் கடற்படையிற் பின்வரும் நியமனங்களை அங்கீகரித்தலில் அதி உத்தமராம் சனாதிபதி அவர்கள் களிகூர்ந்துள்ளார் :—

**1974**, சனவரி 01 ஆம் திகதிமுதல் இலங். தே. சே. தக்ஷயா—இன் கொமாண்டிங்–ஒபிசர் ஆகக் கடவர் :

லெஃவ்ரினன்ற்–கொமாண்டர் எஃவ். எம். தர்மரத்ன, இலங். க. ப.

**1974**, சனவரி 01 ஆம் திகதிமுதல் இலங். தே. சே. வீரயா—இன் கொமாண்டிங்–ஒபிசர் ஆகக் கடவர் :

லெஃவ்ரினன்ற்–கொமாண்டர் ஏ. என். த அன்ட்ருடோ, இலங். க. ப.

1973, நவெம்பர் 01 ஆம் திகதிமுதல் இலங். தே. சே. ரங்கல்ல—இன் கொமாண்டிங்–ஒபிசர் ஆகக் கடவர் :

லெஃவ்ரினன்ற்–கொமாண்டர் பீ. உவை. சி. லேக்கம்வசம், இலங். க. ப.

**1974**, சனவரி 01 ஆம் திகதிமுதல் இலங். தே. சே. றுஹுன—இன் கொமாண்டிங்–ஒபிசர் ஆகக் கடவர் :

லெஃவ்ரினன்ற்—கொமாண்டர் டபிள்யூ. டபிள்யூ. ஈ. சி. பர்ணந்து, இலங். க. ப.

1973, நவெம்பர் 01 ஆம் திகதிமுதல் இலங். தே. சே. பலவதா—இன் கொமாண்டிங்–ஒபிசர் ஆகக் கடவர் :

லெஃவ்ரினன்ற்–கொமாண்டர் எல். ஆர். ராஜசிங்கம், இலங். க. ப.

1974, சனவரி 01 ஆம் திகதிமுதல் இலங். தே. சே. எலாரு—இன் கொமாண்டிங்–ஒபிசர் ஆகக் கடவர் :

லெஃவ்ரினன்ற்–கொமாண்டர் ஆர். எஸ். ஜயநெத்தி, இலங். க. ப.

1974, சனவரி 01 ஆம் திகதிமுதல் இலங். தே. சே. ரணகாமீ—இன் கொமாண்டிங்–ஒபிசர் ஆகக் கடவர் :

லெஃவ்ரினன்ற்–கொமாண்டர் ரி. சோமசுந்தரம், இலங். கப..

1973, செத்தெம்பர் 01 ஆம் திகதிமுதல் இலங். தே. இழுபடகு அலியா–இன் கொமாண்டிங்–ஒபிசர் ஆகக் கடவர் :

லெஃவ்ரினன்ற்–கொமாண்டர் ஜி. டி. ஏ. வீரசேகர, இலங். க. ப.

அதி உத்தமரின் ஆணைப்படி,

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 15 ந உ.

10–20—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

## அமைச்சரவை நியமனங்களும் பிறவும்

1973 இன் இல. 460

**அமைச்சரவையானது** பின்வரும் நியமனங்களைச் செய்துள்ளது :—

**எண் : அமப. 343/73.**

திரு. டி. ராஜேந்திரா அவர்கள் 1973, யூலை 1 ஆம் திகதிமுதல் மேலும் கட்டளையிடப்படும்வரை பொது நிருவாக, உள்ளூராட்சி, உள் நாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவராகக் கடவர்.

**எண் : அமப 366/73**

இலங்கை பொறியலாளர் சேவையின் வகுப்பு I, தரம் II ஐச் சேர்ந்த திரு. ஜெ. எஸ். ஜயசிங்ஹ அவர்கள், 1973, பெப்புருவரி 13 ஆம் திகதி முதல் மேலும் கட்டயிடப்படும்வரை, நீர்ப்பாசன, மின்வலு, பெருவீதிகள் அமைச்சில் சிரேட்ட உதவிச் செயலாளர் (தொழில்நுட்ப) ஆகக் கடவர்.

**எண் : அமப 306/73**

கணக்காளர் சேவையின் வகுப்பு II ஐச் சேர்ந்த கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் பிரதான கணக்காளர், திரு. சி. சனுவடன அவர்கள், 1973, ஓகத்து 01 ஆம் திகதிமுதல் மேலும் கட்டளையிடப்படும்வரை, தமது கடமைகளுடன் மேலதிகமாக, உப்பு ஆணையாளராகக் கடவர்.

**எண் : அமப 234/73**

நில அளவையாளர் பிரதித் தலைமையதிபதி, திரு. ஏ. எம். குமாரசுவாமி அவர்கள், 1973, ஓகத்து 17 ஆம் திகதிமுதல் மேலும் கட்டளையிடப்படும்வரை நில அளவையாளர் தலைமையதிபதியாகக் கடவர்.

எம். எஸ். ஆலிஃவ்,
அமைச்சரவையின் செயலாளர்.

அமைச்சரவையின் அலுவலகம்,
குடியரசுக் கட்டடம்,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 20 ந உ.

10–132—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

## மற்றைய நியமனங்களும் பிறவும்

1973 இன் இல. 461

பா 4/1/10/47/73 (வா) பா 4/1/25/93/73 (வா)
பா 4/1/10/53/73 (வா) பா 4/1/28/99/73 (வா)
பா 4/1/12/35/73 (வா) பா 4/1/32/114/73 (வா)
பா 4/1/16/64/72 (வா) பா 4/1/35/127/73 (வா)
பா 4/1/16/64/73 (வா) பா 4/1/38/132/73 (வா)
பா 4/1/16/69/73 பா 4/1/7 /25 /73 (வா).

**நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டம்**

(6 ஆம் அத்தியாயமான) நீதிமன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் 82, 83 ஆம் பிரிவுகளின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, பதில் நீதி அமைச்சர் ரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான்,

1. ரணவக ஆரச்சிகே போதிவஞ்ச விஜேவிக்ரம சேனநாயக்க அவர்களை பாணந்துறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,
2. எஸ். மொஹொமட் உஸ்மான் அவர்களை நுவரேலியா நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,
3. உபாலி குமாரசிங்க அவர்களை நுவரேலியா நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,
4. ரிகிரிபண்டா ராஜகுரு அவர்களை மாத்தளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,
5. களுபண்டாரகே ஞானபால அவர்களை மாத்தறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,
6. ஹத்தொட்டுமகமகே கருணசேகர விஜேவர்த்தன அவர்களை மாத்தறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,
7. வனிகசிங்க ஆரச்சிகே றெம்லட் அவர்களை மாத்தறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,
8. பி. ஏ. சுகதபால அவர்களை மாத்தறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,
9. வீ. ஜீ. எஸ். விக்ரமநாயக்க அவர்களை மாத்தறை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,
10. திருமதி நுருல் ஹிதயா இப்ராஹிம் அவர்களை மட்டக்களப்பு நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,
11. தென்னக்கோன் முதியன்சேலாகே பண்டார உபாசக மஹதாகே சுத்தகாமி ஜயவர்த்தன அவர்களை அனுராதபுரம் நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவானாகவும்,

12. பொல்லெகல ஆரச்சிகே ரீபின் சிஞ்ஞோ பொல்லெகல அவர்களை அனுராதபுரம் நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவாஞகவும்,

13. மலமடுவே அப்புகாமிலாகே விக்ரமதிலக அவர்களை அனுராதபுரம் நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவாஞகவும்,

14. கே. மல்ஹாமி அவர்களை அனுராதபுரம் நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவாஞகவும்,

15. வேலாதேகே முதலிகாமி அவர்களை அனுராதபுரம் நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவாஞகவும்,

16. குமாரசிங்க புஞ்சிபண்டாகே முதுபண்டா அவர்களை அனுராதபுரம் நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவாஞகவும்,

17. முசிபத்துதேவயலாகே கிரிவானே ஜினசேகர அவர்களை பதுளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவாஞகவும்,

18. சியன் முத்தையா நடராஜா அவர்களை பதுளை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவாஞகவும்,

19. எல். ஆர். முதியஞ்சே அவர்களை கேகாலை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவாஞகவும்,

20. ஜீ. கே. மாட்டின் பெரேரா அவர்களை கேகாலை நீதிநிருவாக மாவட்டத்திற்கான ஒரு சமாதான நீதிவாஞகவும்,

இத்தால் நியமிக்கின்றேன்.

ரத்தினசிறி விக்கிரமநாயக்க,
பதில் நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
1973 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 25 ந் உ.

10–109—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

1973 இன் இல. 462

அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி, உண்ணாட்டலுவல்கள் அமைச்சினால் பின்வரும் நியமனங்கள் இலங்கை நிருவாக சேவையிற் செய்யப் பட்டுள்ளன :—

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. டபிள்யு. எஸ். சமரநாயக்க மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1972.09.16 தொடக்கம் இந்திய வம்சாவழியினரைப் பதிவு செய்வதற்கு உதவி ஆணையாளராகவும் தமது கடமைகளுடன் குடிவரவு, குடியகல்வு, பதில் உதவிக் கட்டுப்பாட்டாளராகவும்.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. டி. எம். பி. விஜேவர்தன 1972.09.18 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும்வரை இந்திய வம்சாவழியினரைப் பதிவு செய்வதற்கு உதவி ஆணையாளராகவும் தமது கடமைகளுடன் குடிவரவு, குடியகல்வு, பதில் உதவிக் கட்டுப்பாட்டாளராகவும்.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்தவரும் புத்தளம் நிருவாக மாவட்டத்து பகுதி இறைவரி உத்தியோகத்தருமான (தலைமைக் காரியாலயம்) திரு. டபிள்யு. ஜீ. விஜேவர்த்தன 1972.12.01 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை தமது கடமைகளுடன், அம்மாவட்டத்தின் அதிகாரபூர்வமான அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் புத்தளம் நிருவாக மாவட்டத்திற்கு உதவி அரசாங்க அதிபராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்தவரும் மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் உத்தியோகத்தருமான திரு. என். பத்மநாதன் தமது கடமைகளுடன் 1973.01.05 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை சிறு கைத்தொழில் பதில் உதவிப் பணிப்பாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்தவரும் மாத்தளை நிருவாக மாவட்டத்தின் ரத்தோட்டைப் பகுதியின் பகுதி இறைவரி உத்தியோகத்தருமான திரு. ரி. எஸ். சில்வா தமது கடமைகளுடன் 1972.12.18 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை அந்நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் அம்மாவட்டத்து உதவி அரசாங்க அதிபராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்தவரும் கேகாலை நிருவாக மாவட்டத்தின் அலுத்துகம கோரளை மேற்கிற்கும் பணவல கோரளைப் பகுதிக்கும் பகுதி இறைவரி உத்தியோகத்தரான திரு. ஆர். ஏ. ஏ. ரணவீர 1973.01.15 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை தமது கடமைகளுடன் அந்நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் அம்மாவட்டத்திற்கு உதவி அரசாங்க அதிபராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்தவரும், மட்டக்களப்பு நிருவாக மாவட்டத்தில் பகுதி இறைவரி உத்தியோகத்தருமான (தலைமைக் காரியாலயம்) திரு. ரி. குமாரதாசன் தமது கடமைகளுடன் 1973.01.15 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை அந்நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின்கீழ் அம்மாவட்டத்து உதவி அரசாங்க அதிபராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்தவரும் நுவரெலியா நிருவாக மாவட்டத்தில் கொத்மலே பகுதிக்கு பகுதி இறைவரி உத்தியோகத்தருமான திரு. கே. விஜேசிங்க தமது கடமைகளுடன் நுவரெலியா நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் 1973.01.15 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை அம்மாவட்டத்திற்கு உதவி அரசாங்க அதிபராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்தவரும் கொழும்பு நிருவாக மாவட்டத்தில் கங்கபட பத்துவா, சியான கோறளை கிழக்குப் பகுதிக்கு பகுதி இறைவரி உத்தியோகத்தருமான திரு. கே. யூ. டபிள்யு. அமரசேகரா தமது கடமைகளுடன் 1973.01.15 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கொழும்பு நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் அந்நிருவாக மாவட்டத்திற்கு உதவி அரசாங்க அதிபராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்தவரும் குருநாகல் நிருவாக மாவட்டத்தில் பிங்கிரியாப் பகுதிக்கு பகுதி இறைவரி உத்தியோகத்தருமான திரு. பி. இராஜகருண 1973.01.19 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை தமது கடமைகளுடன் குருநாகல் நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் அம்மாவட்டத்து உதவி அரசாங்க அதிபராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்தவரும் காலி நிருவாக மாவட்டத்தின் பகுதி இறைவரி உத்தியோகத்தருமான (தலைமைக் காரியாலயம்) திரு. டபிள்யு. ஏ. டபிள்யு. பெரேரா 22.01.1973 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை தமது கடமைகளுடன் காலி நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் அந்நிருவாக மாவட்டத்து உதவி அரசாங்க அதிபராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்தவரும் மொனராகலை நிருவாக மாவட்டத்து வெல்லவாயப் பகுதிக்கு பகுதி இறைவரி உத்தியோகத்தருமான திரு. பி. கே. ரொட்றிகோ 1973.01.22 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை தமது கடமைகளுடன் மொனராகலை நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின்கீழ் அந்நிருவாக மாவட்டத்திற்கு உதவி அரசாங்க அதிபராக.

திரு. பி. என். கருணரட்ண, கூட்டுறவுச் சங்கங்கள் பரிசோதகர், தரம் I 1973.02.01 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கூட்டுறவு அபிவிருத்தி பதில் உதவி ஆணையாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்தவரும் கொழும்பு நிருவாக மாவட்டத்து அத்தனகலை பகுதிக்கு பகுதி இறைவரி உத்தியோகத்தருமான திரு. பி. ஏ. சேனரட்ன 1973.02.01 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கொழும்பு நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் அந்நிருவாக மாவட்டத்திற்கு உதவி அரசாங்க அதிபராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்தவரும் மொனராகலை நிருவாக மாவட்டத்து பகுதி இறைவரி உத்தியோகத்தருமான (தலைமைக் காரியாலயம்) திரு. பி. கெ. ஏ. ஏ. டீ. அல்விஸ், மொனராகலை நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் 1973.02.17 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை அந்நிருவாக மாவட்டத்துக்கு உதவி அரசாங்க அதிபராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்தரும் அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டத்து கிருவாபத்து வடக்கிற்குப் பகுதி இறைவரி உத்தியோகத்தருமான திரு. ஏ. விஜேதுங்க அம்பாந்தோட்டை நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் அந்நிருவாக மாவட்டத்திற்கு 1973.03.03 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை உதவி அரசாங்க அதிபராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்தவரும் மாத்தளை நிருவாக மாவட்டத்து நௌலாப் பகுதிக்கு பகுதி இறைவரி உத்தியோகத்தருமான திரு. சி. ஆரியப்பெருமா 1973.01.17 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை மாத்தளை நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் அம்மாவட்டத்து உதவி அரசாங்க அதிபராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்தவரும் மாத்தளை நிருவாக மாவட்டத்து தம்புலாப் பகுதிக்கு பகுதி இறைவரி உத்தியோகத்தருமான திரு. பி. பி. எம். குணதிலக 1973.01.22 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை மாத்தளை நிருவாக மாவட்டத்து அரசாங்க அதிபரின் பணிப்பின் கீழ் அந்நிருவாக மாவட்டத்து உதவி அரசாங்க அதிபராக.

திரு. எச். விஜேதிலக, உணவு விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர், 1973.06.10 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை விலைகள் உதவிக் கட்டுப்பாட்டாளராக.

இலங்கை நிருவாக சேவையின் மூன்றும் வகுப்பைச் சேர்ந்த திரு. எல். பி. த அல்விஸ் அவர்கள் 1972 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை கண்டி நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான அரசாங்க அதிபரின் பதில் அலுவலக உதவியாளராக் கடமை புரிக.

பி. எச். சிறிவர்தன,
அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி,
உண்ணாட்டலுவல்கள் அமைச்சின்
செயலாளர்.

அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி, உண்ணாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 7,
1973 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 07 ந் உ.

10–101—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

## 1973 இன் இல. 463

பொது எழுதுநர் சேவையின் அதிவிசேட வகுப்பிற்குப் பின்வரும் நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன :—

1. பொது எழுதுநர் சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. டி. ஏ. சுமதிரட்ன 1973, எப்பிரல் 10 ஆந் திகதி தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும்வரை சமூக சேவைகள் அமைச்சில் பதில் அலுவலக உதவியாளராக.

2. பொது எழுதுநர் சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. எஸ். டீ.எஸ். விதாரண களுத்துறை நிருவாக மாவட்டத்தின் அதிகாரபூர்வமான அரசாங்க அதிபருக்கு 1972, யூலை 01 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை பதில் அலுவலக உதவியாளராக.

3. பொது எழுதுநர் சேவையின் அதிவிசேட வகுப்பைச் சேர்ந்த திரு. பீ. எச். பிரேமரட்ன 1973, பெப்ரவரி 28 ஆந் திகதி தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை நுவரெலியாப் பிரதேசக் கல்வித் திணைக்களத்திற்கு நிருவாக உத்தியோகத்தராக.

4. பொது எழுதுநர் சேவையின் அதிவிசேட வகுப்பைச் சேர்ந்த திரு. ஏ. வி. கூல் 1973, பெப்ரவரி 28 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை அம்பாறை ஹாடி சிரேட்ட தொழில்நுட்பக் கல்லூரியிற் பதிவாளராக.

5. பொது எழுதுநர் சேவையின் அதிவிசேட வகுப்பைச் சேர்ந்த திரு. ஜி. எம். கம்கே 1973, பெப்ரவரி 27 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கேகாலை பிரதேசக் கல்வித் திணைக்களத்திற்கு நிருவாக உத்தியோகத்தராக.

6. பொது எழுதுநர் சேவை அதிவிசேட வகுப்பைச் சேர்ந்த திரு. எஸ். மாசிலாமணி 1973, பெப்ரவரி 28 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை மட்டக்களப்புப் பிரதேசக் கல்வித் திணைக்களத்திற்கு நிருவாக உத்தியோகத்தராக.

7. பொது எழுதுநர் சேவை அதிவிசேட வகுப்பைச் சேர்ந்த திரு. பி. டி. ஏ. ஏ. கே. செனவிரட்ன 1973, பெப்ரவரி 27 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கம்பஹா பிரதேசக் கல்வித் திணைக்களத்திற்கு நிருவாக உத்தியோகத்தராக.

8. பொது எழுதுநர் சேவை அதிவிசேட வகுப்பைச் சேர்ந்த திரு. எச். எம். ஜெயதிலக் 1973, பெப்ரவரி 27 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை அநுராதபுர பிரதேசக் கல்வித் திணைக்களத்திற்கு நிருவாக உத்தியோகத்தராக.

9. பொது எழுதுநர் சேவை அதிவிசேட வகுப்பைச் சேர்ந்த திரு. டி. கே. மனம்பெரி 1973, பெப்ரவரி 28 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை இரத்தினபுரி பிரதேசக் கல்வித் திணைக்களத்திற்கு நிருவாக உத்தியோகத்தராக.

10. பொது எழுதுநர் சேவை அதிவிசேட வகுப்பைச் சேர்ந்த திரு. ஏ. மகாலிங்கம் 1973, பெப்ரவரி 28 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை யாழ்ப்பாண பிரதேசக் கல்வித் திணைக்களத்திற்கு நிருவாக உத்தியோகத்தராக.

11. பொது எழுதுநர் சேவை அதிவிசேட வகுப்பைச் சேர்ந்த திரு. எம். எச். பீ. கே. மலலகெற்றி 1973, பெப்ரவரி 28 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கண்டிப் பிரதேச கல்வித் திணைக்களத்திற்கு நிருவாக உத்தியோகத்தராக.

12. பொது எழுதுநர் சேவை அதிவிசேட வகுப்பைச் சேர்ந்த திரு. டபிள்யு. ஜே. எச். என். பெரேரா 1973, பெப்ரவரி 27 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை குருநாகல் பிரதேச கல்வித் திணைக்களத்திற்கு நிருவாக உத்தியோகத்தராக.

13. பொது எழுதுநர் சேவை அதிவிசேட வகுப்பைச் சேர்ந்த டி. ஜே. சந்திரசீலா 1973, மார்ச்சு 05 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை பண்டாரவளை பிரதேசக் கல்வித் திணைக்களத்திற்கு நிருவாக உத்தியோகத்தராக.

14. பொது எழுதுநர் சேவை அதிவிசேட வகுப்பைச் சேர்ந்த திரு. டி. சி. எச். பெரேரா 1973, பெப்ரவரி 27 தொடக்கம் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை களுத்துறை பிரதேசக் கல்வித் திணைக்களத்திற்கு நிருவாக உத்தியோகத்தராக.

15. பொது எழுதுநர் சேவை அதிவிசேட வகுப்பைச் சேர்ந்த திரு. எல். ஏ. விஜேசிங்க 1973, பெப்ரவரி 27 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை பரீட்சைத் திணைக்களத்திற்கு நிருவாக உத்தியோகத்தராக.

16. பொது எழுதுநர் சேவை அதிவிசேட வகுப்பைச் சேர்ந்த திரு. எம். எம். யு. தம்மிகா 1973, பெப்ரவரி 27 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் பதிவாளராக.

17. பொது எழுதுநர் சேவை அதிவிசேட வகுப்பைச் சேர்ந்த திரு. ஏ. எம். வீரக்கூன் 1973, பெப்ரவரி 27 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை கல்வி அமைச்சின் அலுவலக உதவியாளராக.

18. பொது எழுதுநர் சேவை அதிவிசேட வகுப்பைச் சேர்ந்த திரு. ஏ. ஜி. எல். சந்திரசிங்க 1973, மார்ச்சு 15 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை காலி பல்தொழில்நுட்பக் கல்லூரிக்கு பதிவாளராக.

ஆர். எம். பீ. சேனநாயக்க,
அரசாங்க நிருவாகப் பணிப்பாளர்
அதிபதிக்காக.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
ரொறிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7, 1973 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 25 ந் உ.

10–173—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

# அரசாங்க அறிவித்தல்கள்

## 1971 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க அரசாங்க அலுவலர் நலவுதவிச் சங்கச் (கூட்டிணைத்தல்) சட்டம்

1971 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க அரசாங்க அலுவலர் நலவுதவிச் சங்கச் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க அலுவலர் நலவுதவிச் சங்கத்தால் ஆக்கப்பட்டதும் அப்பிரிவினுல் எமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு நிதி அமைச்சரால் உறுதிப்படுத்தப்பட்டவையுமான விதிகள்.

எல். பி. அபேறத்ன,
பதில் செயலாளர்,
நிதியமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 19 ஆந் தேதி.

### விதிகள்

1. 26 (3) ஆம் விதியாகப் பின்வருவனவற்றைச் சேர்க்க—

" 26 (1) ஆம் விதியின் கீழ் செலுத்தற்பாலதான உதவுதொகை 1974.01.01 முதல் 11 ரூபாவாதல் வேண்டும், இதில் 1 ரூபா மரணக் கொடுப்பனவுக்காகவும் 10 ரூபா இளைப்பாற்று நலனுக்காய உதவுதொகையாயுமமையும்."

2. விதி 5 (1) —

" ஆயிரத்து இருநூறு " என்பதற்குப் பதிலாக " ஆயிரத்து நானூறு" என்பதனைச் சேர்க்க.

10–102—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

## அரசாங்கக் கணக்காளர் சேவை

1971 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆந் தேதிய 14,985/7 ஆம் இலக்க இலங்கை அரசாங்க (அதிவிசேடச்) செய்திமடலினுலும், 1973 ஆம் ஆண்டு சனவரி மாதம் 5 ஆந் தேதிய 41 ஆம் இலக்க இலங்கைக் குடியரசுச் செய்திமடலினுலும் திருத்தப்பட்டவாறான 1971 ஆம் ஆண்டு யூன் மாதம் 4 ஆந் தேதிய 14,961 ஆம் இலக்க இலங்கை அரசாங்கச் செய்திமடலில் வெளியிடப்பட்ட அரசாங்கக் கணக்காளர் சேவை பற்றிய பிரமாணக் குறிப்பு, பின்வருமாறு மேலுந் திருத்தப்படவேண்டுமென அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் கட்டளையிட்டுள்ளார் :—

திருத்தம் : (1) பந்தி (4) இல் உள்ள உப–பந்தி (அ) விற்கு பின்வரும் தகைமையும் சேர்க்கப்பட்டுள்ளது.

(iii) சான்றுபெற்ற கூட்டுக்கணக்காளர் சங்கத்தின் அங்கத்தவர்கள் (ஏ.சி.சி.ஏ.) ஐ.இ.

திருத்தம் : (2) பந்தி (4) உப–பந்தி (ஆ) விற்குப் பின்வரும் தகைமையும் சேர்க்கப்பட்டுள்ளது.

(iv) வர்த்தகத்தில் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் தகுதித் தேர்வுச் சான்றிதழ் பெற்றோர்.

திருத்தம் : (3) பந்தி 9 (ஈ) இன் கீழுள்ள குறிப்பை நீக்கிவிட்டு பின்வரும் புதிய குறிப்பைப் பதிலிடுக :—

குறிப்பு : 1970.12.30 ஆந் தேதியன்றோ அதற்கு முன்னரோ ஏலவே சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் இத்தேவையிலிருந்து விலக்களிக்கப்பெறுவர்.

பீ. எச். சிறிவர்த்தன,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர்.

அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7, 1973 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 27 ஆந் வ.

10–174—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

## விலங்கின, தாவரப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

1964 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கச் சட்டத்தினுலும் 1970 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தினுலும் திருத்தப்பட்டவாறான (469 ஆம் அத்தியாயமான) விலங்கின, தாவரப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 2 ஆம் உட்பிரிவின்கீழ் கப்பற்றெழில், சுற்றுலா அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

பி. பீ. ஜி. கலுகல்ல,
கப்பற்றெழில், சுற்றுலா அமைச்சர்.

கொழும்பு, 1973 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 20 ந வ.

### கட்டளை

இதற்குள்ள அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள நிலப்பரப்பு 1964 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கச் சட்டத்தினுலும் 1970 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தினுலும் திருத்தப்பட்டவாறான (469 ஆம் அத்தியாயமான) விலங்கின தாவரப் பாதுகாப்புக்கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காகப் பாதுகாப்பிடமொன்ருக இதனுல் வெளிப்படுத்தப்படுகிறது.

### அட்டவணை

ஹொறகொல்ல பாதுகாப்பிடம்

கொழும்பு மாவட்டம், சியானகோறளை கிழக்கு பெரும்பாக அரசிறை அலுவலர் பிரிவின் உடகஹபத்துவவிலுள்ள நம்படளுவ கிராமத்தில் அமைந்துள்ள அண்ணளவாக 33 ஏக்கர் விஸ்தீரணமுள்ளதும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதும் ஹொறகொல்ல கலய என்றழைக்கப்படுவதுமான காணித்துண்டு முழுவதும்.

வடக்கு : எம். டி. கிரிகோறிசும் மறுபேரும் உரிமைகோரும் வெவுலியட்டயென்று அழைக்கப்படும் காணியாலும், ஐ. டி. சிசிலினும் மறுபேரும் உரிமைகோரும் டச்சக்கொட்டுவ என்றழைக்கப்படும் காணியாலும் ;

கிழக்கு : ஏ. பி. ஜக்கோலிஸ் அப்புகாமியும் நம்பாலாவும் மறுபேரும் உரிமைகோரும் கலவத்த எனறு அழைக்கப்படும் காணியாலும், திருமதி சிறிமா ஆர். டி. பண்டாரநாயகாவும் மறுபேரும் உரிமைகோரும் ஹொறகொல்லவத்த என அழைக்கப்படும் தென்னந் தோட்டத்தாலும் வனத்தாலும் ;

தெற்கு : திருமதி சிறிமா ஆர். டி. பண்டாரநாயகாவும் மறுபேரும் உரிமைகோரும் ஹொறகொல்லவத்தை என அழைக்கப்படும் வனத்தாலும் ;

மேற்கு : திருமதி சிறிமா ஆர். டி. பண்டாரநாயகாவும் மறுபேரும் உரிமைகோரும் ஹொறகொல்லவத்த என அழைக்கப்படும் வனத்தாலும், ஹொறகொல்ல வத்தை என அழைக்கப்படும் தென்னந் தோட்டத்தாலும், றெக்மன் டயஸ் பண்டாரநாயகா உரிமைகோரும் பின்னபொலவத்த என அழைக்கப்படும் காணியாலும்.

10–45—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

## தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

1964 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கச் சட்டத்தினுலும் 1970 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தினுலும் திருத்தப்பட்டவாறான (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 1 ஆம் உப பிரிவின்கீழ் கப்பற்றெழில், சுற்றுலா அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

பி. பீ. ஜி. கலுகல்ல,
கப்பற்றெழில், சுற்றுலா அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 10 ந வ.

### கட்டளை

1. 1964 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கச் சட்டத்தினுலும் 1970 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தினுலும் திருத்தப்பட்டவாறான (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக இதற்குள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முடிக்குரிய காணி இடப்பரப்பானது தேசிய ஒதுக்கிடமொன்ருக இருத்தல் வேண்டுமென்று இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது.

2. மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக மேற்சொல்லப்பட்ட தேசிய ஒதுக்கிடத்தின் முழு இடப்பரப்பும் தேசிய பூங்காவொன்ருக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது.

### அட்டவணை

வடமத்திய மாகாணம் அனுராதபுரம் மாவட்டம் நுவரகம்பலாத மேற்கில் வில்லாச்சிய கோறளையில் மொறகொல்லே கடவதுலன பிரிவு எண் 3 (அ) வில் அமைந்துள்ள பின்வரும் எல்லைகளைக்கொண்ட 467 ஏக்கர் பரப்பளவைக் கொண்டதுமான முடிக்குரிய காணியின் எல்லாப் பாகமும்.

எப். வி. பி. 723 இன் 15 ஆம் கூறின் தென்கிழக்கு மூலையானதும் குணுவிலகமவவயின் கிழக்கு அணையின் அந்தம் திம்பிரிவவ அம்பககவவ வீதியைச் சந்திக்கும் குறியிலிருந்து வரையப்பட்ட நேர் வரையாலும், தென்மேற்குமுகமாக அணைக்கு நேரே அணையின் மேற்கு முனையை அது சந்திக்கும்வரைக்கும் ; பின் அதிலிருந்து மேற்கு முகமாக எப். வி. பி. 723 இன் 22 ஆம் கூறாக அமைந்துள்ளதும் டட்ணவவவிற்குச் செல்லும் அடிப்பாதை ஓரமாக 10 சங்கிலி தூரம் வரையுமானதும் ; பின் அதிலிருந்து வடமேற்கு முகமாக குணுவிலகம மரதன்மடுவ வீதிக்குச் சமாந்தரமாக 68 சங்கிலி தூரம்வரை வில்பத்து தேசிய பூங்காவின் 3 ஆம் துண்டின் கிழக்கெல்லையைச் சந்திக்கும்வரைக்கும் ; பின் அதிலிருந்து கிழக்கு முகமாக சொல்லப்பட்ட எல்லை ஓரமாக 20 சங்கிலி தூரம்வரை கொங்ககவவ அலவை அது சந்திக்கும்வரைக்கும் (எவ். வி. பி. 723 இல் கூறு 8) ; பின் அதிலிருந்து சொல்லப்பட்ட எல்லையோரமாக வடகிழக்கு முகமாக 20 சங்கிலி தூரம்வரை திம்பிரிவவ மரதன்மடுவ வீதியை அது சந்திக்கும்வரை ; பின் அதிலிருந்து சொல்லப்பட்ட எல்லையோரமாக வடகிழக்குமுகமாக 20 சங்கிலி தூரம்வரை குக்குள்கட்டுவவிலிருந்து நுவவெம்புவவுக்குப் போகும் பாதையை அது சந்திக்கும்வரைக்கும் ; பின் அதிலிருந்து குணுவிலகம (எவ்.வி.பி. 723), முவவெம்புவ (எப்.வி.பி. 724) கிராமங்களில் பொது எல்லையை அது அடையும்வரை வடகிழக்கு முகமாக 25 சங்கிலிதூரம்வரைக்கும் ; பின் அதிலிருந்து தென்கிழக்குமுகமாக எவ். வி. பி. 724 இன் 3 ஆம் கூறாகவுள்ளதும் குணுவிலகம மரதன்மடுவ வீதிக்குச் சமாந்தரமாக குணுவிலகம அம்பககெ வீதியை அடையும்வரை 70 சங்கிலி தூரம்வரைக்கும் ; பின் அதிலிருந்து சொல்லப்பட்ட குணுவிலகம அம்பககவெவ வீதியோரமாக தென்மேற்குமுகமாக முவவெம்புவ (எப். வி. பி. 724), குணுவிலகம (எப். வி. பி. 723) கிராமங்களின் பொது கிராம எல்லையை அது அடையும்வரைக்கும் ; பின் அதிலிருந்து எவ். வி. பி. 723 இன் 13 ஆம் கூறானதும் சொல்லப்பட்ட வீதியோரமாக தென்மேற்குமுகமாக ஆரம்ப முனையை அடையும்வரைக்கும்.

10–617/1—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

### தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

1964 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1970 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 1 ஆம் உப பிரிவின்கீழ் கப்பற்றொழில் சுற்றுலா அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

பி. பீ. ஜி. கலுகல்ல,
கப்பற்றொழில் சுற்றுலா அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 10 ந் உ.

### கட்டளை

1. 1964 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1970 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக இதற்குள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முடிக்குரிய காணி இடப்பரப்பான்து தேசிய ஒதுக்கிடமொன்றாக விருத்தல் வேண்டுமென்று இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது.

2. மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக மேற்சொல்லப்பட்ட தேசிய ஒதுக்கிடத்தின் முழு இடப்பரப்பும் தேசிய பூங்காவொன்றாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது.

### அட்டவணை

ஊவா மாகாணம் மொனறாகல மாவட்டம் தனமல்வில புத்தள பெரும்பாக அரசிறை அலுவலர் பிரிவுகளிலுள்ள புத்தள கோறளையில் 146 ஆம் இலக்க கதிர்காமப் பிரிவிலும் 142 ஆம் இலக்க மெதகம பிரிவிலும் பின்வரும் எல்லைகளைக் கொண்டதும் அண்ணளவாக 25·7 சதுரமைல் பரப்பளவைக் கொண்டதுமான முடிக்குரிய காணியின் எல்லாப் பாகமும்.

கடைசியாகச் சமர்ப்பிக்கப்பட்ட ஞேப்போ கிடைப்படம் எண் 51 இன் கிழக்கெல்லையில் உள்ளதும் 22 ஆம் மைற் கல்லடியில் புத்தள கதிர்காம வீதியையும் கோனகன் அலவயையும் ஊடறுக்கும் நேர் வரையாலும், மேற்குப் பக்கமாகவும் அதிலிருந்து தெற்குப் பக்கமாகவும் கோனகன் அல இடதுகரையோரமாக அவ்வரை மாணிக்ககங்கையை இணைக்கும்வரையுமானதும் ; எவ். ரி. பி. 51 இன் தென்கிழக்கு எல்லையைக் கொண்டதுமானதும் ; அதிலிருந்து மாணிக்ககங்கையின் இடது வரை ஓரமாக 4½ மைல் தூரத்திற்கு எப். ரி. பி. 26 இன்படி யடல்கம கிராமத்தின் தெற்கெல்லையை அது இணைக்கும்வரைக்கும் ; பின் அதிலிருந்து எப். ரி. பி. 26 இன் எல்லையோரமாகக் கிழக்குப் பக்கமாகவும் மேற்குப் பக்கமாகவும் எவ். ரி. பி. 25 ஆம் எண்ணுடைய முதலாம் கூறின் வடக்கெல்லையைச் சந்திக்கும்வரைக்கும் ; பின் அதிலிருந்து தென்கிழக்காக எப். ரி. பி. 25 கூறு 1 (அ) வின் தென் கிழக்கு எல்லையோரமாக எற்பன்தெனிய அல ஆர மேற்குக் கரையை அடையும்வரைக்கும் ; பின் அதிலிருந்து மேற்சொல்லப்பட்ட ஆர ஓரமாக தெற்குப் பக்கமாகவும் தென்மேற்குப் பக்கமாகவும் எப். ரி. பி. 25 கூறு 1 (அ) வின் கிழக்கு எல்லையாக அமைந்துள்ளதும் எப். ரி. பி. 25 கூறு 1 (ஆ) வின் வடகிழக்கெல்லையை அடையும்வரையுமானதும் ; பின் அதிலிருந்து மேற்சொல்லப்பட்ட ஆர ஓரமாக எப். ரி. பி. 25 கூறு 1 (ஆ) வின் கிழக்கெல்லையாக அமைந்துள்ளதும் மாணிக்ககங்கையின் இடது கரையை அடையும்வரையும் ; பின் அதிலிருந்து மாணிக்ககங்கையின் இடது கரையிலிருந்து தென்மேற்குப் பக்கமாகவும், தென்கிழக்குப் பக்கமாகவும், தெற்குப் பக்கமாகவும், தென்கிழக்காகவும் செல்லக்கதிர்காமத்தில் கரவில வீதியை அடையும்வரைக்கும் ; பின் அதிலிருந்து புத்தள கதிர்காம வீதியின் 34 ஆம் மைற்கல்லை அடையும்வரைக்கும் ; பின் அதிலிருந்து புத்தள கதிர்காம வீதி ஓரமாக வடக்காகவும் வடமேற்காகவும் ஆரம்பமுனையை அடையும்வரைக்கும்.

10–617/2—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

### சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டம்

35 (1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

(54 ஆம் அத்தியாயமான) சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 33 (1) ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, பதில் நீதியமைச்சர், ரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், திருவாளர்கள் எஸ். ஆர். இராசையா அவர்கள், கே. பாலசிங்கம் அவர்கள், எஸ். இரத்தினவேல் அவர்கள், எ. தம்பு அவர்கள் ஆகியோரை 1973 செப்தெம்பர் 1 ஆந் திகதி முதல் தொடங்கும் ஓராண்டு காலத்திற்குக் கோப்பாய் திறந்தவெளிச் சிறைச்சாலைக்கான உள்ளூர் பார்வையிடற் குழுவின் உறுப்பினர்களாக இத்தால் நியமிக்கின்றேன்.

ரத்தினசிறி விக்கிரமநாயக்க,
பதில் நீதியமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
1973 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 19 ந் உ.

10–21—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

**கண்டி மாவட்டத்தில் புதிய இறைவரி அலுவலர் பிரிவை ஸ்தாபித்தல்**
**கங்க இஹல கோறளை**

1973 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 24 ஆம் திகதி முதல் கண்டி நிருவாக மாவட்டத்தில் உள்ள உடபலாத்த இறைவரி அலுவலர் பிரிவை (1) உடபலாத்த (2) கங்க இஹல கோறளை என இருபிரிவு இறைவரி அலுவலர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன என பொதுமக்கள் தகவலுக்காக இத்தால் அவிறிவிக்கப்படுகின்றது.

2. உடபலாத்த, கங்க இஹல கோறளை பிரிவு இறைவரி அலுவலர் பிரிவுகளுள் பின்வரும் கோறளைகள் அடங்கும்.

(அ) உடபலாத்த இறைவரி அலுவலர் பிரிவு, கந்துகர இஹல கோறளை, கந்துகர பஹல கோறளை, கங்க பஹல கோறளை.

(ஆ) கங்க இஹல கோறளை இறைவரி அலுவலர் பிரிவு : கங்க இஹல் கோறளை.

3. (அ) உடபலாத்த இறைவரி அலுவலர் பிரிவில் பின்வரும் கிராம சேவையாளர்களின் பிரிவுகள் அடங்கும்.

கி. சே. இல. 292 கம்பளை—கிழக்கு
292எ கம்பளை—மேற்கு
293 கஹட்டபிட்டிய
293எ உனும்புவ
294 கிரிந்த
296 போவல
297 ரத்மல்கடுவ
298 முல்கம
298எ பல்லெகெல்தொட்ட
298பீ தும்பெலவக்க
299 லெகும்தெனிய
299எ துன்தெனிய
300 நாரன்விட்ட
300எ இஙகுறுவத்த
301 தொளுவ
302 களுக்முவ
303 ஹிந்தகல
304 அங்கம்பன
305 அட்டபாகே பல்லேகம
306 அட்டபாகே உடகம
306எ அட்டபாகே இஹலகம
307 புஸ்ஸெல்லாவ
307பீ புபுரெஸ்ஸ
307சி துனுகேஉள்ள
308 கலத்த
308எ மாவத்துர

(ஆ) கங்க இஹல கோறளை இறைவரி அலுவலர் பிவிரில் பின்வரும் கிராமசேவையாளர்களின் பிரிவுகள் அடங்கும்.

கி. சே. இல. 286 பியனகொல்ல
286எ உடுவெல்ல
287 யட்டபான
287எ பல்லேபிட்டிய
288 கிராஉல்ல
288எ கொஹெறாவல
289 ஹெரகொல
289எ குடமாகே
290 கம்பொலவெவ
291 உளபனே

4. பின்வரும் உள்ளூராட்சி சபைகளின் பிரதேசங்கள் இப்புதிய இறைவரி அலுவலர் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் அடங்கும்.

(அ) உடபலாத்த இறைவரி அலுவலர் பிரிவு :—கம்பளை நகரசபை, புன்செல்லாவ பட்டினசபை, கந்துகர இஹல கோறளை கிராம சபை, கந்துகர பஹல கோறளை கிராமசபை, கங்க பஹல கோறளை கிராமசபை,

(ஆ) கங்க இஹல கோறளை இறைவரி அலுவலர் பிரிவு, கம்பளை நகரசபை (குடமாக்க கம்பளவெல கிராம சேவைகள் பிரிவுகளில் ஒரு பகுதி) கங்க இஹல கோறளை கிராமசபை.

5. இப்புதிய பிரிவு இறைவரி அலுவலர்களின் பிரிவுகளில் பின்வரும் கிராம கோடுகள் நீதிபரிபாலனம் செய்வனவாகும் :—

(அ) உடபலாத்த இறைவரி அலுவலர் பிரிவு. —தெல்பிட்டிய கிராமக் கோடு, தவுலகல கிராமச் கோடு நாவலபபிட்டி கிராமக்கோடு.

(ஆ) கங்க இஹல கோறளை இறைவரி அலுவலர் பிரிவு :—தெல் பிட்டிய கிராமக்கோடு, உடஹேனதென்ன கிராமக்கோடு, நாவலப்பிட்டி கிராமக் கோடு.

6. இப்புதிய இறைவரி அலுவலர் பிரிவுகள் பின்வரும் தேர்த்தல் அடங்கும்.

(அ) உடபலாத்த இறைவரி அலுவலர் பிரிவு :—50ம் இலக்க கம்பளை தேர்தல் தொகுதி, 51 ம் இலக்க நாவலப்பிட்டி தேர்தல் தொகுதி (கலத்த, நாவத்துர கிராம சேவகர் பிரிவுக்காக) 43 ம் இலக்க கணடி தேர்தல தொகுதி (ஹிந்தகல கிராம சேவகர் பிரிவுக்காக.)

(ஆ) கங்க இஹல கோரளை இறைவரி அலுவலர் பிரிவு :—51ம் இலக்க நாவலபபிட்டி தேர்தல் தொகுதி.

7. இப்புதிய இறைவரி அலுவலர் பிரிவுகள் பின்வரும் இடங்களில் செயல்படும்.

(அ) உடபலாத்த இறைவரி அலுவலர் பிரிவு :—கம்பளை.

(ஆ) கங்க இஹல கோறளை இறைவரி அலுவலர் பிரிவு:—லெண்டன்ஹில் தோட்டம்.
"பீ" பிரிவு,
கம்பளை.

பி. சிரிவர்தன்,
காரியதரிசி,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

1973 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 21 ஆம் உ.
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
கொழும்பு. 7,

10–27—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

**கடை, அலுவலகத் தொழிலாளர் (வேலை, ஊதிய ஒழுங்குபடுத்துகை) அதிகாரச் சட்டம்**

7 ம் பிரிவுக்கமைந்த கட்டளை

பின்னர் திருத்தியமைக்கப்பட்டவாறுள (129 ம் அத்தியாயமாகிய) கடை, அலுவலகத் தொழிலாளர் (வேலை, ஊதிய ஒழுங்குபடுத்துகை) அதிகாரச் சட்டத்தின் 7 ம் பிரிவின்படி எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் தத்துவங்களைக் கொண்டு தொழில் அமைச்சர் மைக்கேல் போல் த சொய்சா சிறிவர்த்தன ஆகிய யான் இக்கட்டளையினால்—

(1) இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட நாள்கள் 1971 ம் ஆண்டின் 29 ம் இலக்க விடுமுறை அதிகாரச் சட்டத்தின் பொருளுக்கமைய அரசாங்க விடுமுறைகளென்பதனால், முற் கூறிய பிரிவின் நோக்கங்களுக்காக விடுமுறைகளாதல் வேண்டு மெனப் பிரகடனஞ் செய்கின்றேன் ; அத்துடன்,

(2) முற்கூறிய பிரிவிற்கமையச் செய்யப்பட்டு, 1973 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 28 ந் தேதியன்று வெளிவந்த 52/8 ம் இலக்க அசாதாரணச் செய்திமடலிற் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினை நீக்குகின்றேன்.

எம். பி. டி. இசற். சிறிவர்த்தன,
தொழில் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 18 ந் உ.

**அட்டவணை**

விடுமுறைகள்

1. தமிழ்த் தைப்பொங்கற்றிருநாள்,
2. சிங்கள, தமிழ்ப் புத்தாண்டுத் திருநாளுக்கு நேரடுத்து முந்திய நாள்,
3. சிங்கள, தமிழ்ப் புத்தாண்டுத் திருநாள்,
4. மே நாள் (மே 1 ந் தேதி),
5. குடியரசுத் திருநாள் (மே 22 ந் தேதி),
6. சிங்கள விசாக மாதத்தின் பூரணைக்கு நேரடுத்த நாள்,
7. மீலா–துன்–நபி (நபிகள் நாயகம் ஸல். அவர்கள்) பிறந்த திருநாள்,
8. பண்டாரநாயகா நினைவு நாள் (செத்தெம்பர் 26 ந் தேதி),
9. நத்தார்த் திருநாள்.

10–86—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

### இணக்கச் சபைகள் சட்டம்

கட்டளை

இலங்கை அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆம் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக் கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினல் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினுல் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங் களைக் கொண்டு பிரதி நீதி அமைச்சர், ரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1970 யூலை மாதம் 20 ஆம் தேதிய 14,915/4 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 45 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட குருநாகல் மாவட்டத்திலுள்ள நாதகனே கிராமப் பகுதிக்கென அமைக் கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன் :—

(1) உஹுமீய, ஹொம்தாகம விகாரையைச் சேர்ந்த வண. பம்புறுகம தம்மஜோதி தேரோ ;

(2) மஹகெலிய, பாம் எஸ்ரேட்டைச் சேர்ந்த சிங்சிலி வந்து ராகல அவர்கள் ;

(3) கட்டுபொத ஐச் சேர்ந்த திசாநாயக்க முதியஞ்சேலாகே சரத் திசாநாயக்க அவர்கள் ;

(4) பனுதறகம, கடபவத்கர ஐச் சேர்ந்த புலாதுரையலாகே குணதிலக அவர்கள் ;

(5) பமுணுகொட்டுவ, பத்தேகம ஐச் சேர்ந்த ராஜகருணு பண்டிதயலாகே அமாறிஸ் நயிதே அவர்கள் ;

(6) மாஸ்பொத்த, மஹகெலிய ஐச் சேர்ந்த பமுணுகொட்டுவே திசாநாயக்க முதியஞ்சேலாகே ரண்ஹாமி திசாநாயக்க அவர்கள் ;

(7) மாஸ்பொத்த, கெலிமுனே 7 ம் கட்டையடி திசாநாயக்க முதியஞ்சேலாகே முதலிஹாமி அவர்கள் ;

(8) மாஸ்பொத்த, கெலிமுனே ஐச் சேர்ந்த திசாநாயக்க முதியஞ்சேலாகே முதலிஹாமி திசாநாயக்க அவர்கள் ;

(9) பனுதரகம, மூனமலே ஐச் சேர்ந்த வாஹல முதியஞ் சேலாகே களுபண்டா வாஹல அவர்கள் ;

(10) பனுதரகம, பனுதர வளவ்வ ஐச் சேர்ந்த சந்திரசேகர முதியஞ்சேலாகே கிரிமுதியஞ்சே அவர்கள் ;

(11) பனுதரகம, மீவர்தன ஐச் சேர்ந்த சந்திரசேகர முதியஞ் சேலாகே சந்திரசேகர அவர்கள்

(12) மாஸ்பொத்த, மஹகெலிய ஐச் சேர்ந்த ஏக்கநாயக்க முதியஞ்சேலாகே ரண்பண்டா வைத்தியர் அவர்கள் ;

(13) பமுணுகொட்டுவ, வல்பொல, "வினிதா" ஐச் சேர்ந்த அதாசூரிய முதியஞ்சேலாகே புஞ்சிபண்டா அவர்கள் ;

(14) மஹகெலிய, கொலமுன்ன விகாரையைச் சேர்ந்த வண. வாரியப்பொல சரணபால தேரோ ;

(15) பனுதரகம, கோன்மிற்றியன ஐச் சேர்ந்த அதிகாரி முதி யஞ்சேலாகே கிரிபண்டா அவர்கள் ;

(16) பனுதரகம, கடபத்வஹர ஐச் சேர்ந்த மிரியா துரையலாகே லூவிஸ் அவர்கள் ;

(17) மாஸ்பொத்த, மஹகெலிய ஐச் சேர்ந்த குறுப்பு ஆராய்ச் சிகே ரண்ஹாமி அவர்கள் ;

(18) தெமட்டலுவ, அம்பல்வ ஐச் சேர்ந்த வீசிங்க முதியஞ் சேலாகே பண்டார அவர்கள் ;

(19) ஈதன்வத்த, வாதண்ட ஐச் சேர்ந்த அதிகாரி முதியஞ் சேலாகே புஞ்சிபண்டா முதலாளி அவர்கள் ;

(20) ஈதனவத்த, ஈதனவத்தயைச் சேர்ந்த இலங்கோன் முதி யஞ்சேலாகே ரிகிரிபண்டா அவர்கள் ;

(21) ஈதனவத்த, லினிகிரிய ஐச் சேர்ந்த கிரிபண்டா கப்புகொட் டுவ வைத்தியர் அவர்கள் ;

(22) மாஸ்பொத்த, நவகத்த ஐச் சேர்ந்த அத்தபத்து முதி யஞ்சேலாகே அப்புஹாமி அவர்கள் ;

(23) ஈதன்வத்த, ஹுணுகும்புர ஐச் சேர்ந்த ராஜகுரு முதி யஞ்சேலாகே அப்புஹாமி அவர்கள் ;

(24) மாஸ்பொத்த ஹன்ஹமுணுவ ஐச் சேர்ந்த டிங்கிரிபண்டா குலதுங்க வைத்தியர் அவர்கள் ;

(25) மாஸ்பொத்த, றுக்கத்தன ஐச் சேர்ந்த டிங்கிரிபண்டா திவாகர அவர்கள் ;

(26) தெமட்டலுவ, ஹம்பாரே ஐச் சேர்ந்த வீசிங்க முதியஞ் சேலாகே ரிகிரிபண்டா (தொரே) அவர்கள் ;

(27) பமுணுகொட்டுவ, கத்திரியாவ ஐச் சேர்ந்த ஏக்கநாயக்க முதியஞ்சேலாகே ரணசிங்க அவர்கள்;

(28) பமுணுகொட்டுவ, வல்பொல இல. 239 ஐச் சேர்ந்த அதாசூரிய முதியஞ்சேலாகே ரண்பண்டா ராஜபக்ச அவர்கள் ;

(29) பமுணுகொட்டுவ, கல்லாபிட்டிய ஐச் சேர்ந்த திசாநாயக்க முதியஞ்சேலாகே சிரிசேன் திசாநாயக்க அவர்கள் ;

(30) பமுணுகொட்டுவ, மூனமலே ஐச் சேர்ந்த பஸ்நாயக்க முதியஞ்சேலாகே அப்புஹாமி அவர்கள் ;

(31) கட்டுபொத்த, புப்போவ ஐச் சேர்ந்த வேரகொடகமகே தொன் மெதியஸ் அப்புஹாமி அவர்கள் ;

(32) பனுதரகம, மூனமலே ஐச் சேர்ந்த ஜய்வீர ஹேரத் முதியஞ்சேலாகே ஹேரத் பண்டா அவர்கள்.

(ஆ) மஹகெலிய, பாம் எஸ்ரேட்டைச் சேர்ந்த சிங்சிலி வந்துராகல அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராகவிருக்க நிய மிக்கின்றேன் ;

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டுமெனவும் நிச்சயிக்கின்றேன்.

ரத்தினசிறி விக்கிரமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12, 1973 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 25 ந் உ.

10–172—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

## விலைக்கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இலக்கம் : வி. 116. | உப உணவுப் பொருட்கள்

### விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

(173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினுல் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு வவுனியா மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி (உணவும், நானுவிதப் பொருட்களும்) கந்தையா சிவப்பிரகாசம் ஆகிய நான இக்கட்டளையால்—

(1) 11.3.68 ம் திகதியில் வெளிவந்த 14,792/5 இலக்கத்தைக் கொண்ட இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரமான 8.3.68 திகதி கொண்ட வீ. 110 இலக்க விலைக்கட்டளையை உடனடியாக நீக்கிவிடுகிறேன்.

(2) (173 ம் அத்தியாயமான) விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரகாரம் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் மொத்த வியாபாரிகளின் உச்ச மொத்த விலையாக இப்போதைக்கென விதிக்கப்பட்ட விலையுடன் இதற்குள்ள அட்டவணையின் 3 ம் பத்தியில் குறிக்கப்பட்ட தொகை கூட்டப்பட்ட விலையே அட்டவணையின் 2 ம் பத்தியில் விஸ்தரிக்கப்பட்ட இடப்பரப்புகளில் அல்லது நிர்வாக மாவட்டங்களில் 1 ம் பத்தியில் முறையே விபரிக்கப்பட்ட பொருள்களின் அதற்குக் கூடிய விலைக்கு விற்றலாகாத மொத்த அந்தரின் உடனேயே நடைமுறையாகும் மொத்த விலையாக விதிக்கிறேன்.

(3) (173 ம் அத்தியாயமான) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரகாரம் கொழும்பு மாநகர எல்லைக்குள் சில்லறை வியாபாரிகளின் உச்சச் சில்லறை விலையாக இப்போதைக்கெனக் குறிப்பிட்ட விலையுடன் 4 ம் பத்தியில் குறிக்கப்பட்ட தொகையைக் கூட்டிய விலையையே குறித்த அட்டவணையின் நேரொத்த 1 ம் பத்தியில் சொல்லப்பட்ட பொருள்களின் அட்டவணையின் 2 ம் பத்தியிற் குறிக்கப்பட்ட இடப்பரப்பினுள்ள அல்லது மாவட்ட எல்லைக்குள் அதற்குக் கூடிய விலைக்கு விற்றலாகாத நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலையாக உடனடியாக நடைமுறையில் வரும்படி விதிக்கிறேன்.

(4) இக்கட்டளையின் நோக்கத்திற்காக—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளின் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தர் தொகையில், அல்லது அதற்குக் கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகுமெனவும்.

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளின் மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையை யாவது பாவிப்பதற்கு அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விலையாகுமெனவும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள எந்த ஒரு இடத்திலும் எவராவது விற்றலாகாதென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில் அல்லது கட்டுப்பாட்டில், எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வானகத்தில் தகுந்த ஓர் கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளின் சிறு தொகையையும், இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளையும் ஒரு அங்குல உயரத்துக்குக் குறையாத எண்களில் விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளும் ஆகக்கூடிய விலையும் வாங்குபவரால் நன்குகப் பார்க்கக்கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்து பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இருத்தல் " அல்லது " இரு " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாக கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(8) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம், 2 ம் பத்திகளில் விபரிக்கப்பட்ட பொருள்கள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்கு பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச் சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைக்குக் கொடுத்த விலை ;

(ஈ) எவ்வித விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா ?

(9) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எதாவதொரு பொருள் விற்குமிடத்து அட்டவணையின் 3 ம், 4 ம் பத்திகளிற் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளுள் அவ்வாறு விற்கப்படும் பொருட்களைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் எதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1973 ம் ஆண்டு, செப்ரெம்பர் மாதம் 21 ம் தேதி காலை 10 மணிக்கு வவுனியா கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

க. சிவப்பிரகாசம்,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி,
(உணவும் நானாவிதப் பொருட்களும்),
வவுனியா மாவட்டம்.

அட்டவணை

| | பத்தி 1<br>பொருளின் விபரம் | பத்தி 2<br>பரிபாலன மாவட்டத்தின் இடப்பரப்பு | பத்தி 3<br>கொழும்பு மாநகர எல்லைக் குட்பட்ட மொத்த வியாபாரி களின் மொத்த அந்தர் ஒன்று க்கு கூட்டவேண்டிய விலை<br>ரூ. ச. | பத்தி 4<br>கொழும்பு மாநகர எல்லைக் குட்பட்ட சில்லறை வியாபாரி களின் இருத்தல் ஒன்றுக்கு கூட்ட வேண்டிய விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1. | சிந்தாமணிக்கடலை .. .. | வவுனியா .. | 2 71 .. | 0 3 |
| 2. | கொண்டைக்கடலை .. .. | வவுனியா .. | 2 71 .. | 0 3 |
| 3. | முழு உழுந்து .. .. | வவுனியா .. | 2 71 .. | 0 3 |
| 4. | உழுத்தம்பருப்பு உடைத்த உழுந்து .. | வவுனியா .. | 2 71 .. | 0 3 |
| 5. | கடலைப்பருப்பு .. .. | வவுனியா .. | 2 71 .. | 0 3 |
| 6. | துவரம்பருப்பு .. .. | வவுனியா .. | 2 71 .. | 0 3 |
| 7. | கொத்தமல்லி .. .. | வவுனியா .. | 2 71 .. | 0 3 |
| 8. | மாசூர்பருப்பு .. .. | வவுனியா .. | 2 71 .. | 0 3 |

குறிப்பு.—இவ்விலைகள் பொருட்கள் விற்க வேண்டிய குறிப்பிட்ட விலைகளல்ல ; இவை அவற்றினும் பார்க்கக் கூடிய விலைக்கு விற்றலாகா உச்ச விலையாகும்.

10–5—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

விலைக்கட்டளை இல. ஜீ.7/1973. பாண்

### விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (173 ம் அத்தியாயம்) 3(2) ம் பிரிவுடன் இணைந்து செயல்படும் 4 ம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கிணங்க காலி மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவும் நானாவிதப் பொருட்களும்) ஹென்றி விஜேதிலக்க ஆகிய நான் இந்தக் கட்டளையால் —

(1) 1973 ம் ஆண்டு ஜூன் மாதம் 8 ந் திகதியைக்கொண்ட 62/11 ம் இலக்க இலங்கை அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் 1973 ம் ஆண்டு திகதியிடப்பட்டதும் ஜீ. 5 ம் இலக்கம் கொண்டதுமான உணவு விலைக் கட்டளையை 1.10.1973 ல் இருந்து ரத்துச்செய்கிறேன் ;

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம் 3 ம் பந்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே 16 அவுன்ஸைக்கொண்ட பாணையோ 8 அவுன்ஸ் நிறையைக்கொண்ட பாணையோ 1 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசத்தில் விற்கக்கூடிய மிக அதிகவிலையாகவும் விதிக்கிறேன் ;

(3) இக்கட்டளைக்கமைய 8 அவுன்ஸுக்கு மேலான நிறையைக்கொண்ட ஒரு பாணையோ அல்லது 8 அவுன்ஸுக்கு அதிகமான நிறையைக்கொண்ட ஒரு பாணின் பகுதியையோ குறிப்பிட்ட பிரதேசத்தின் எப்பகுதியிலாவது விற்குமிடத்து 16 அவுன்ஸ் பாணுக்கு விதிக்கப்பட்ட மிக அதிக விலையின் பரிமாண வீதப்படி கணக்கிடப்பட்ட விலைக்கே விற்கவேண்டும் எனவும் நியமிக்கிறேன் ;

(4) இக்கட்டளைக்கமைய 8 அவுன்ஸ் நிறையை அல்லது 8 அவுன்ஸுக்கு மேலாகாத நிறையைக்கொண்ட பாணின் ஒரு பகுதியை இப்பிரதேசத்தின் எப்பகுதியிலாவது 8 அவுன்ஸ் பாணின் மிக அதிக விலையின் பரிமாண வீதப்படி கணக்கிடப்பட்ட விலைக்கு மேலாக விற்கக்கூடாது எனவும் உத்தரவிடுகிறேன் ;

(5) இக்கட்டளைக்கமைய, விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் உறைகளின் விலையும், பாணின் மிக அதிக விலையுள் அடங்கும் எனவும் விதிக்கிறேன் ;

(6) இக்கட்டளைக்கமைய மிக அதிகவிலை விதிக்கப்பட்டுள்ள எந்தப் பகுதியிலும் தம்வசம் பாண் வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், விற்பனை நிலையத்தில் அவ்வப்பிரதேசத்திற்கென விதிக்கப்பட்டுள்ள மிக அதிக விலையை நுகர்வோரின் பார்வைக்காக வைக்கவேண்டுமெனவும் உத்தரவிடுகிறேன் ;

(7) இக்கட்டளைக்கமைய மிக அதிக விலைகள் விதிக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் பாண் விற்பனைசெய்யும் ஒவ்வொருவரும், நுகர்வோர் கோருமிடத்து, அன்னாருக்குப் பின்வரும் விபரங்களைக் குறிப்பிடும் பற்றுச்சீட்டு வழங்கவேண்டுமென்வும் உத்தரவிடுகிறேன்:—

(அ) விற்பனை நிகழ்ந்த திகதி ;

(ஆ) விற்ற பாணின் விபரம் ;

(இ) விற்ற பாணின் அளவு (ம்) ;

(ஈ) விற்ற பாணுக்கு செலுத்தப்பட்ட விலை (யும்).

(8) இக்கட்டளைக்கமைய "அவுன்ஸ்" அல்லது "அவு." என்பது அவோயிர்டியுபொயிஸ் நிறுத்தலளவை முறையின் பிரமாண நிறையாகக் கருதப்படவேண்டுமெனவும் விதிக்கிறேன்.

1973 ம் ஆண்டு செத்தெம்பர் மாதத் 28 ந் திகதி மு. ப. 10 மணிக்கு காலியில் கையொப்பமிடப்பட்டது.

எச். விஜேதிலக்க,
காலி மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி,
(உணவும் நானாவிதப் பொருட்களும்).

அட்டவணை

| பந்தி (1) பகுதி | பந்தி (2) 8 அவுன்ஸுக்கு அதிகமான பாணின் ஆகக் கூடிய விலை | பந்தி (3) 8 அவுன்ஸும் அதற்குக் குறைவான நிறையுமுள்ள பாணின் ஆகக்கூடிய விலை |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| காலி மாவட்டம் .. | 0 78 .. | 0 40 |
| | (16 அவுன்ஸுக்கு) | (8 அவுன்ஸுக்கு) |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே குறிப்பிட்டுள்ள பாண் விற்கப்படவேண்டிய விதிக்கப்பட்ட விலைகளல்ல. **இவ்வாகக்கூடிய** விலைகளுக்குமேல் இப்பொருட்கள் விற்கப்படக்கூடாது.

10–206/2—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80.

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### யாத்திரீகர்கள் கட்டளைச் சட்டம்

இல் மஹா உற்சவம்—கதிர்காமம் 1973

மேற்கண்ட உற்சவம் 1973 ம் ஆண்டு நொவம்பர் மாதம் 8 ம், 9ம், 10 ம் திகதிகளில் கொண்டாடப்படும் என்பது இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

இது சம்பந்தமாக 1948 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 30 ம் திகதி வெளியிடப்பட்ட 9,859 ம் இலக்க, 1961 ம் ஆண்டு யூலை மாதம் 7 ம் திகதி 12,508 ம் இலக்க, 1962 ம் ஆண்டு மார்ச் மாதம் 2 ம் திகதி 12,947 ம் இலக்க அரசாங்க வர்த்தமானிகளைப் பார்க்கவும்.

எஸ். ஜே. சுமனசேகரபண்டா,
அரசாங்க அதிபர்,
மொணறுகலை மாவட்டம்.

கச்சேரி,
மொணறுகலை,
1973 ம் ஆ செப்டெம்பர் மீ 20 ந உ.

10–37—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

### கம்பனிகள் கட்டளைச் சட்டம்

**(145 ம் அத்தியாயம்)**

**277 (5) ம் பிரிவின்கீழ் பெயர் நீக்கத்துக்கான அறிவித்தல்**

லையன் ரூவேஸ் அன் றிசோட் லிமிரட் கம்பனிகள் கட்டளைச்சட்டத்தின் (145 ம் அத்தியாயம்) ஏற்பாடுகளின் கீழ் 4.4.67 இல் உருவாக்கப்பெற்ற லையன்ஸ் ரூவேஸ் அனட் றிசோட் லிமிரட் என்னும் கம்பனி வியாபாரம் செய்யவில்லையெனவும் செயற்படவில்லையெனவும் நம்புவதற்கு போதிய காரணம் இருப்பதாலும்,

1973.01.12 ம் திகதியையுடைய 42 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 18.12.72 ம் திகதியையுடைய அறிவித்தலின் பிரகாரம் லயன்ஸ் ருவர்ஸ் அனட் றிசோட் லிமிரட் அதற்கு மாறுபாடாகக் காரணம் காட்டப்பட்டாலன்றி அந்தத் திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவுறும்போது பதிவேட்டிலிருந்து பெயர் நீக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருப்பதாலும் லயன்ஸ் ரூவர்ஸ் அனட் றிசோட் லிமிரட் மூன்று மாதகால எல்லைக்குள் மாறுபாடாகக் காரணம் எதையும் காட்டாதமையாலும்

கம்பனிகள் பதிவாளராகிய ஜெயரத்தினம் பீலிக்ஸ் பொன்னம்பலம் ஆகிய நான், (145 அத்தியாயம்) 277 (5) ம் பிரிவின்கீழ் செயலேற்று இந்த அறிவித்தலின் மூலம் லயன்ஸ் ரூவர்ஸ் அனட் றிசோட் லிமிரட் என்னும் கம்பனி இன்றைய தினம் கம்பனிகள் பதிவேட்டிலிருந்து பெயர்நீக்கம் செய்யப்பட்டு கலைக்கப்பட்டதென பிரகடனம் செய்கின்றேன்.

கம்பனிகள் பதிவாளர்.

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
கொழும்பு 1,
1973 ம் ஆ செப்டெம்பர் மீ 19 ந உ.

10–136—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

## மாத்தளை மாவட்டத்தில் ரத்தோட்டைக் காரியாதிகாரி பிரிவிலுள்ள கிராமசேவகர் பிரிவுகளைத் திருத்தியமைத்தல்

1971 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி வெளிவந்த இல. 14,970 கொண்ட அரசாங்க வர்த்தமானியில் மேற்காணப்படும் விடயம் சம்பந்தமாக பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் இத்தால் நீக்கப்படுவதோடு அதற்குப் பதிலாகக் கீழ்க்காணப்படும் அறிவித்தல் 1972 ஆம் ஆண்டு 01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறையில் வருமெனப் பொதுமக்களின் பார்வைக்காக இத்தால் பிரசுரிக்கப்படுகின்றன.

2. 1971 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து மாத்தளை மாவட்டத்திலுள்ள ரத்தோட்டைக் காரியாதிகாரி பிரிவின் இல. ஈ. 368 முவந்தெனிய, ஈ 371 வேரகம, ஈ 373 பல்லேகம, ஈ 374 உடகம ஆகிய கிராம சேவகர் பிரிவுகள் நான்கும் முறையே ஈ 368 முவந்தெனிய, ஈ 371 வேரகம, ஈ371எ கொஸ்வான, ஈ 373 பல்லேகம, ஈ 374 உடகம என ஐந்து கிராம சேவகர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதென்பதை மக்களின் பார்வைக்காக இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

(அ) கீழ்க்காணப்படும் கிராமங்களும் தோட்டங்களும் இல. ஈ 368 முவந்தெனிய என்னும் கிராம சேவகர் பிரிவினுள் அடங்கும் :—

கன்சரபொல (பகுதி)
பல்லேயாய
பண்டாரபொல தோட்டம் (பகுதி)
முவந்தெனிய
பிட்டகந்த
பிட்டகந்த தோட்டம்

(ஆ) கீழ்க்காணப்படும் கிராமங்களும் தோட்டங்களும் இல. ஈ 371 வேரகம எனப்படும் கிராம சேவகர் பிரிவினுள் அடங்கும் :—

தம்பே
கும்புரே கம்மத்த
உட வேரகம
அலுத்கெதர வத்த
கைனத்த
பண்டாரபொல தோட்டம்.
பல்லேவேரகம (கிழக்கு)
பல்லேவேரகம (மேற்கு)
வீரகோன்கந்த
சுதுகங்கை தோட்டம் (பகுதி)
விகாரகம தோட்டம் (பகுதி)

(இ) கீழ்க்காணப்படும் குடியேற்றப் பகுதிகளும், கிராமங்களும், தோட்டங்களும் இல. ஈ 371எ கொஸ்வான எனப்படும் கிராம சேவகர் பிரிவினுள் அடங்கும் :—

கொஸ்வான குடியேற்றம்
கொஸ்வான
லிந்தபிட்டிய
கைகாவெல தோட்டம்
ஓவல தோட்டம் (பகுதி)

(ஈ) கீழ்க்காணப்படும் கிராமங்களும் தோட்டங்களும் இல. ஈ 373 பல்லேகம எனப்படும் பிராம சேவகர் பிரிவினுள் அடங்கும் :—

கைகாவெல
மதுராவெல
பொல்வத்த
சியொன்வத்த
குறுவாவ
பல்லேகம
கன்சராபொல் தோட்டம்
லோங்வில்ல தோட்டம் (பகுதி)

(உ) கீழ்க்காணப்படும் கிராமங்களும் தோட்டங்களும் இல. ஈ 374 உடகம எனப்படும் கிராம சேவகர் பிரிவினுள் அடங்கும் :—

அலகொலமட
எசின்கம்மத்த
கன்சராபொல (பகுதி)
காலேகொஜுவ தோட்டம்
போகம்பர
காலேகொலுவ
பண்டாரப்பொல் தோட்டம் (பகுதி)

3. இப்புதிய கிராம சேவகர் பிரிவுகளிலும் அடங்கிய மஜிஸ்ரேட் கோடு, கிராமக்கோடு, பொலிஸ் பிரிவு, பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் பிரிவு, உள்ளூராட்சிமன்றங்கள், தேர்தல் தொகுதி ஆகியவை பொதுமக்களின் பார்வைக்காக கீழே தரப்பட்டுள்ளது :—

| கிராம சேவகர் பிரிவு | மஜிஸ்ரேட் கோடு | கிராமக்கோடு | பொலீஸ் பிரிவு | பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் பிரிவு | | உள்ளூராட்சி மன்றம் | தேர்தல் தொகுதி |
|---|---|---|---|---|---|---|---|
| முவந்தெனிய ஈ 368 | மாத்தளை | வாரியப்பொல | மாத்தளை | கன்சருபொல முவந்தெனிய பல்லேயாய | மாத்தளை உடசியபற்று | மாத்தளை உடசியபற்று (வடக்கு) கிராமச் சபையும் | ரத்தோட்டை |
| | | | | பிட்டகந்த | மாத்தளை பல்லேசிய பற்று | மாத்தளை பல்லேசியப்பற்று கிராமச் சபையும் | |
| வேரகம ஈ 371 | மாத்தளை | ரத்தோட்டை | ரத்தோட்டை | மாத்தளை | பல்லேசிய பற்று | மாத்தளை பல்லேசியபற்று கிராமச் சபை | ரத்தோட்டை |
| கொஸ்வான ஈ 371எ | மாத்தளை | கொஸ்வான குடியேற்றம் லிந்தபிட்டிய | ரத்தோட்டை | கொஸ்வான கொஸ்வான கடியேற்றம் | மாத்தளை பல்லேசிய பற்று | மாத்தளை பல்லேசியப்பற்று கிராமச் சபையும் | ரத்தோட்டை |
| | | கொஸ்வான | வாரியப்பொல மாத்தளை | லிந்தபிட்டிய | மாத்தளை பல்லேசியபற்று (கிழக்கு) | மாத்தளை பல்லேசியப்பற்று (கிழக்கு) கிராம சபையும் | |
| பல்லேகம ஈ 373 | மாத்தளை | ரத்தோட்டை | ரத்தோட்டை | மாத்தளை | புல்லேசிய பற்று | மாத்தளை பல்லேசியப்பற்று (கிழக்கு) கிராமச்சபையும் ரத்தோட்டை பட்டினசபையும் | ரத்தோட்டை |
| உடகம ஈ 374 | மாத்தளை | ரத்தோட்டை | ரத்தோட்டை | மாத்தளை | பல்லேசிய பற்று | மாத்தளை பல்லேசிய பற்று கிழக்கு கிராமச்சபை | ரத்தோட்டை |

கச்சேரி, மாத்தளை,
1973 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 21 ந் உ.

சிறில் கமகே,
மாத்தளை மாவட்ட அரசாங்க அதிபர்.

10–22—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

### கம்பனிகள் கட்டளைச் சட்டம் (145 ம் அத்தியாயம்)

277 (5) ம் பிரிவின் கீழ பெயர் நீக்கத்துக்கான அறிவித்தல்

**த சிலோன் ஒடோமடிக் அன்ட் வென்டிங் கம்பனி லிமிரட்**

கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் (145 ம் அத்தியாயம்) ஏற்பாடுகளின் கீழ் 1948 ஒக்தோபர் மாதம் 28 ம் திகதியில் உருவாக்கப்பெற்ற த சிலோன் ஒடோமடிக் அன்ட் வென்டிங் கம்பனி லிமிரட் என்னும் கம்பனி வியாபாரம் செய்யவில்லையெனவும் செயற்படவில்லையெனவும் நம்புவதற்கு போதிய காரணம் இருப்பதாலும்,

1967.1.20 ம் திகதியையுடைய 14,732 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1967.1.02 ம் திகதியையுடைய அறிவித்தலின் பிரகாரம் த சிலோன் ஒடோமடிக் அன்ட் வென்டிங் கம்பனி லிமிரட், அதற்கு மாறுபாடாகக் காரணம் காட்டப்பட்டாலன்றி அந்தத் திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவுறும்போது பதிவேட்டிலிருந்து பெயர் நீக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருப்பதாலும்,

த சிலோன் ஒடோமடிக் அன்ட் வென்டிங் கம்பனி லிமிரட் மூன்று மாத கால எல்லைக்குள் மாறுபாடாகக் காரணம் எதையும் காட்டாதமையாலும்,

கம்பனிகள் பதிவாளராகிய ருவன்புர லிக்மன் டி சில்வா ஆகிய நான் (145 ம் அத்தியாயம்) 277 (5) ம் பிரிவின் கீழ் செயலேற்று இந்த அறிவித்தலின் மூலம் த சிலோன் ஒடோமடிக் அன்ட் வென்டிங் கம்பனி லிமிரட் என்னும் கம்பனி, இன்றைய தினம் கம்பனிகள் பதிவேட்டிலிருந்து பெயர் நீக்கம் செய்யப்பட்டு குலைக்கப்பட்டதென பிரகடனம் செய்கின்றேன்.

ரு. லி. த. சில்வா,
கம்பனிகள் பதிவாளர்.

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
கொழும்பு 1,
1973 ம் ஆ செத்தெம்பர் மீ 19 ந் வ.

10–135—05.10.73 ம் திகதிய வர்த்தமானி இல. 80

---

### கம்பனிகள் கட்டளைச் சட்டம் (145 ம் அத்தியாயம்)

277 (3) ம் பிரிவின் கீழ் பெயர் நீக்கத்திற்கான அறிவித்தல்.

**நீர்கொழும்பு டுவர்ஸ் லிமிரட்**

கம்பனிகள் கட்டளைச்சட்டத்தின் (145 ம் அத்தியாயம்) ஏற்பாடுகளின் கீழ் 1962.8.4 ம் திகதியில் இல் கூட்டர்பெற்ற நீர்கொழும்பு டுவபஸ் லிமிரட் என்னும் கம்பனி வியாபாரம்செய்யவில்லை எனவும், செயற்படவில்லை எனவும் நம்புவதற்கு நியாயமான காரணம் இருத்தலால் இதற்கு மாறுபாடான காரணம் காட்டாதவிடத்து, கம்பனிகள் பதிவாளராகிய ருவான்புர லிக்மன் டி சில்வா ஆகிய நான், கம்பனிகள், கட்டளைச்சட்டத்தின் (145 ம் அத்தியாயம்) 277 (3) ம் பிரிவின்படி செயலேற்று, இத்திகதியில் இருந்து 3 மாத இறுதியில் நீர்கொழும்பு டுவர்ஸ் லிமிரட் இன் பெயர் இத் திணைக்களத்தில் இருக்கும் கம்பனிகளின் பதிவேட்டில் இருந்து நீக்கப்பெற்று, குறித்த கம்பனி குலைக்கப்படுமென இத்தால் அறிவித்தல் தருகிறேன்.

ரு. லி. த சில்வா,
கம்பனிகள் பதிவாளர்.

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
கொழும்பு 1,
1973 ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ம் திகதி.

10–88—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

### கூட்டுறவுச் சங்கங்களைக் கலைத்தல்

நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தல்

**1970 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டம்**

1970 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டத்தின் 9 (2) வது பிரிவின் பிரகாரம் கீழே தரப்படும் சங்கங்களை நேரே குறிக்கப்படும் திகதிகளில் கலைப்பதற்கான அறிவித்தல் இத்தால் தரப்படுகிறது.

| | சங்கத்தின் பெயர் | கலைக்கப்பட்ட நாள் |
|---|---|---|
| 1. | மட்டுப்பபடுத்தப்பட்ட பலிப்பான விசாகா மாதர் கூட்டுறவு சேமிப்புச் சங்கம் .. .. .. | 73.07.12 |
| 2. | மட்டுப்படுத்தப்பட்டாத தெகிந்த ஐக்கிய கூட்டுறவு கடனுதவு சங்கம் .. .. .. | 73.07.12 |
| 3. | மட்டுப்படுதத்ப்பட்ட இலுக்வத்த ஓடு, செங்கல் வேலையாளர் கூட்டுறவுச் சங்கம் .. .. | 73.07.12 |
| 4. | மட்டடுப்படுத்தப்பட்ட யட்டிநுவர கிராம அரசாங்க தோட்ட பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கம் .. .. | 73.07.12 |
| 5. | மட்டுப்படுத்தப்பட்ட வட்டப்பொல கமுனு மரவேலையாளர் கூட்டுறவுச் சங்கம் .. .. | 73.07.12 |
| 6. | மட்டுப்படுத்தப்பட்ட கரடிக்குலி மாதர் கூட்டுறவு பண்ணைப் பறவைச் சங்கம் .. .. .. | 73.07.17 |
| 7. | மட்டுப்படுத்தப்பட்ட இஸ்லாமிய இளம் விவசாயிகள் கூட்டுறவு விவசாயச் சங்கம் .. .. | 73.07.18 |
| 8. | மட்டுப்படுத்தப்பட்ட பங்காதெனிய இளம் விவசாயிகள் கூட்டுறவு விவசாயச் சங்கம் .. | 73.07.18 |
| 9. | மட்டுப்படுத்தப்படாத முல்லிப்பொட்டானெய் இல : VIII கூட்டுறவு கடனுதவு சங்கம் .. .. | 73.07.20 |
| 10. | மட்டுப்படுத்தப்பட்ட மாயியாவ இளம் விவசாயிகள் கூட்டுறவு விவசாயச் சங்கம் .. .. | 73.07.21 |
| 11. | மட்டுப்படுத்தப்பட்ட ஓலுவில் ஹமீதுயா கூட்டுறவுப் பண்டகசாலைச் சங்கம் .. .. .. | 73.07.23 |
| 12. | மட்டுப்படுத்தப்பட்ட ஓலுவில் பிரிவு 1 கூட்டுறவுப் பண்டகசாலைச் சங்கம் .. .. .. | 73.07.23 |
| 13. | மட்டுப்படுத்தப்பட்ட கிறிலகஹவெல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் .. .. .. | 73.07.23 |
| 14. | மட்டுப்படுத்தப்பட்ட பாத்தருகலவத்த கூட்டுறவுப் பண்டகசாலைச் சங்கம் .. .. .. | 73.07.30 |
| 15. | மட்டுப்படுத்தப்பட்ட அஹுன்கல்லமாகும்புற இளம் விவசாயிகள் கூட்டுறவு விவசாயச் சங்கம் .. | 73.07.31 |

ஆர். பீ. இராஜகுரு,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்.

கூட்டுறவுத் திணைக்களம்,
த. பெ. இல. 419.
டியூக் வீதி,
கொழும்பு 1.
1973 செப்டெம்பர் 18 ஆந் திகதி.

10–84—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

## கூட்டுறவுச் சங்கங்களைக் கலைத்தல்

### நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்தல்

கூட்டுறவுச் சங்கங்களின் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 124) கூட்டுறவுச் சங்கங்களின் கட்டளைச்சட்டத்தின் 52 (2) வது பிரிவின் பிரகாரம் கீழே தரப்படும் சங்கங்களை நேரே குறிக்கப்படும் திகதிகளில் கலைப்பற்தான அறிவித்தல் இத்தால் தரப்படுகிறது.

| | சங்கத்தின் பெயர் | கலைக்கப்பட்ட நாள் |
|---|---|---|
| 1. | மட்டுப்படுத்தப்பட்ட லோகஹெட்டி கூட்டுறவுச் பண்டக சாலைச் சங்கம் .. .. | 73.07.01 |
| 2. | மட்டுப்படுத்தப்பட்ட கந்திரியாவ கூட்டுறவுப் பண்டக சாலைச் சங்கம் .. .. .. | 73.07.01 |
| 3. | மட்டுப்படுத்தப்பட்ட பேறதுடுவ கூட்டுறவு பண்டகசாலைச் சங்கம் .. .. | 73.07.02 |
| 4. | மட்டுப்படுத்தப்பட்ட அன்கொக்காவல கூட்டுறவுப் பண்டக சாலைச் சங்கம் .. .. .. | 73.07.02 |
| 5. | மட்டுப்படுத்தப்பட்ட தேவமெதிஹத்பத்து மாவட்ட அரசிறை அலுவலக நலனோம்பு சேமிப்பு கூட்டுறவுச் சங்கம் .. .. | 73.07.05 |
| 6. | மட்டுப்படுத்தப்பட்ட திசோகம இளம் விவசாயிகள் கூட்டுறவு விவசாயச் சங்கம் .. .. | 73.07.05 |
| 7. | மட்டுப்படுத்தப்பட்ட முத்துகல தெங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் .. .. .. | 73.07.05 |
| 8. | மட்டுப்படுத்தப்பட்ட பொல்கஹவில மாதர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் .. .. | 73.07.05 |
| 9. | மட்டுப்படுத்தப்பட்ட இஹல பாலுகம மாதர் சிக்கன சேமிப்புக் கூட்டுறவுச் சங்கம் .. .. | 73.07.05 |
| 10. | மட்டுப்படுத்தப்பட்ட எட்டம்பிட்டிய குலங்கன சிக்கன சேமிப்பு கூட்டுறவுச் சங்கம் .. .. | 73.07.05 |
| 11. | மட்டுப்படுத்தப்பட்டாத அலுத்நுவர கூட்டுறவு கடனுதவு சங்கம் .. .. .. | 73.07.05 |
| 12. | மட்டுப்படுத்தப்பட்ட ஊவகந்தெகெதர கூட்டுறவுப் பண்டக சாலைச் சங்கம் .. .. | 73.07.05 |
| 13. | மட்டுப்படுத்தப்பட்ட தெமோதர மரவேலை கூட்டுறவுச் சங்கம் .. .. .. | 73.07.05 |
| 14. | மட்டுப்படுத்தப்பட்ட கறந்தகொல்ல காமினி சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கம் .. .. | 73.07.05 |
| 15. | மட்டுப்படுத்தப்பட்ட நுவரேலியா மலே சனசமூக கூட்டுறவுச் சங்கம் .. .. .. | 73.07.05 |
| 16. | மட்டுப்படுத்தப்பட்ட கடதொறபிட்டிய கூட்டுறவுச் பண்டக சாலைச் சங்கம் .. .. .. | $73.07.0_5$ |
| 17. | மட்டுப்படுத்தப்பட்ட ஹய் பொறஸ்ட் தோட்ட கூட்டுறவுப் பண்டகசாலைச் சங்கம் .. .. | 73.07.05 |
| 18. | மட்டுப்படுத்தப்பட்ட வேவன்டன் தொகுதி கூட்டுறவுப் பண்டகசாலைச் சங்கம் .. .. | 73.07.05 |
| 19. | மட்டுப்படுத்தப்பட்ட பலாகொல்ல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் .. .. .. | 73.07.05 |
| 20. | மட்டுப்படுத்தப்பட்ட பஹல பிட்டியல கூட்டுறவுப் பண்டக சாலைச் சங்கம் .. .. .. | 73.07.05 |
| 21. | மட்டுப்படுத்தப்பட்ட கிறித்தலே கூட்டுறவுப் பண்டகசாலைச் சங்கம் .. .. .. | 73.07.09 |
| 22. | மட்டுப்படுத்தப்பட்ட யாலேகம கூட்டுறவுப் பண்டகசாலைச் சங்கம் .. .. .. | 73.07.09 |
| 23. | மட்டுப்படுத்தப்பட்ட மன்னுகொட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் .. .. .. | 73.07.09 |
| 24. | மட்டுப்படுத்தப்பட்ட நியாகம கூட்டுறவுப் பண்டகசாலைச் சங்கம் .. .. .. | 73.07.09 |
| 25. | மட்டுப்படுத்தப்பட்ட மஹகொட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் .. .. .. | 73.07.09 |
| 26. | மட்டுப்படுத்தப்பட்ட கந்துறுதுவே கூட்டுறவுப் பண்டக சாலைச் சங்கம் .. .. .. | 73.07.09 |
| 27. | மட்டுப்படுத்தப்பட்ட இந்துறுவ கலகம கூட்டுறவுப் பண்டகசாலைச் சங்கம் .. .. .. | 73.07.09 |
| 28. | மட்டுப்படுத்தப்பட்ட மாத்தறை மாவட்ட ஆயுர்வேத கூட்டுறவுச் சங்கம் .. .. .. | 73.07.09 |
| 29. | மட்டுப்படுத்தப்பட்ட முதுகமுவ கூட்டுறவு விவசாய உற்பத்தி விற்பனவுச் சங்கம் .. .. | 73.07.12 |
| 30. | மட்டுப்படுத்தப்பட்ட எஹெலெபொல குமாரிஹாமி கனிஹ பல்கலைக்கழக கூட்டுறவுச் சங்கம் .. | 73.07.12 |
| 31. | மட்டுப்படுட்த்தப்பட்ட மினிப்பே கூட்டுறவு விவசாய உற்பத்தி விற்பனவுச் சங்கம் .. .. | 73.07.12 |
| 32. | மட்டுப்படுத்தப்பட்ட வட்டிக்ண்டல் கட்டடங்கள் கூட்டுறவுச் சங்கம் .. .. .. | 73.07.12 |
| 33. | மட்டுப்படுத்தப்பட்ட தலாகொலவெவ் புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் .. .. .. | 73.07.12 |
| 34. | மட்டுப்படுத்தப்படாத மாதுவாகல கூட்டுறவுக் கடனுதவு சங்கம் .. .. .. | 73.07.12 |
| 35. | மட்டுப்படுத்தப்பட்ட உஸ்ஸாபிட்டிய கூட்டிறவுப் பண்டக சாலைச் சங்கம் .. .. .. | 73.07.16 |
| 36. | மட்டுப்படுத்தப்பட்ட உடலவெல பலதோக்குக் கூட்டுறவுச் சங்கம் .. .. | 73.07.17 |
| 37. | மட்டுப்படுத்தப்பட்ட முறுங்கன் பண்ணைப்பணியாளர் கூட்டுறவு சிக்கனக் கடனுதவு சங்கம் .. | 73.07.17 |
| 38. | மட்டுப்படுத்தப்பட்ட கதிரிப்பாய் கிழக்கு கூட்டுறவுக் கடனுதவு சங்கம் .. .. .. | 73.07.17 |
| 39. | மட்டுப்படுத்தப்படாத எத்தாலே கூட்டுறவு சிக்கன கடனுதவு சங்கம் .. .. .. | 73.07.18 |
| 40. | மட்டுப்படுத்தப்யட்ட ஆரச்சிக்கட்டுவ கூட்டுறவு விவசாய உற்பத்தி விற்பனவுச் சங்கம் .. .. | 73.07.18 |
| 41. | மட்டுப்படுத்தப்பட்ட யட்டவலன்பத்து கிழக்கு கூட்டுறவு விவசாய உற்பத்தி விற்பனவுச் சங்கம் .. | 73.07.18 |
| 42. | மட்டடுப்படுத்தப்பட்ட தக்குனு ஒத்தர பலாத்த கூட்டுறவு விவசாய உற்பத்தி விற்பனவுச் சங்கம் .. | 73.07.18 |
| 43. | மட்டுப்படுத்தப்பட்ட கட்டுனேறிய அர்ச். செபஸ்தியன் கூட்டுறவுப் பண்டகசாலைச சங்கம் .. .. | 73.07.18 |
| 44. | மட்டுப்படுத்தப்பட்ட ஆண்டியாகம கூட்டுறவுப் பண்டக சாலைச் சங்கம் .. .. .. | 73.07.20 |
| 45. | மட்டுப்படுத்தப்பட்ட பன்னில கூட்டுறவு விவசாய உற்பத்தி விற்பனவுச் சங்கம்.. .. .. | 73.07.20 |
| 46. | மட்டுப்படுத்தப்பட்ட பேகமுவ பலநோக்குக் கூடுட்றவுச் சங்கம் .. .. .. | 73.07.20 |
| 47. | மட்டுப்படுத்தப்பட்ட அலுத்தகம மாலேவன தெபெத்த கூட்டுறவு விவசாய உற்பத்தி விற்பனவுச் சங்கம் .. | 73.07.23 |
| 48. | மட்டுப்படுத்தப்பட்ட வந்தாறுமூலை பிள்ளையாரடி கூட்டுறவு கடனுதவு சங்கம் .. .. .. | 73.07.23 |
| 49. | மட்டுப்படுத்தப்பட்ட இஹலகொட கூட்டுறவுப் பண்டகசாலைச் சங்கம் .. .. .. | 73.07.23 |
| 50. | மட்டுப்படுத்தப்பட்ட மண்டூர் அம்பிகா கூட்டுறவுப் பண்டக சாலைச் சங்கம் .. .. .. | 73.07.24 |
| 51. | மட்டுப்படுத்தப்பட்ட அலுத்தவத்த அர்ச். செபஸ்தியன் கூட்டுறவுப் பணடகசாலைச் சங்கம் .. .. | 73.07.24 |
| 52. | மட்டுப்படுத்தப்பட்ட ஏறுவூர் பிரிவு 3 அசாபியா கூட்டுறவு சங்கம் .. .. .. | 73.07.25 |
| 53. | மட்டுப்படுத்தப்பட்ட கட்டுகெந்த கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் .. .. .. | 73.07.30 |
| 54. | மட்டுப்படுத்தப்படாத கொடகவெல கூட்டுறவு கடனுதவு சங்கம் .. .. .. | 73.07.30 |
| 55. | மட்டுப்படுத்தப்படாத துங்கம கூட்டுறவுக் கடனுதவு சங்கம் .. .. .. | 73.07.30 |
| 56. | மட்டுப்படுத்தப்படாத நுவரேலியா ஸ்ரீ பராக்கிரம கூட்டுறவு தொழிற் சங்கம் .. .. | 73.07.30 |
| 57. | மட்டுப்படுத்தப்பட்ட குடாவெல்ல கிழக்கு கூட்டுறவுப் பண்டகசாலைச் சங்கம் .. .. .. | 73.07.30 |
| 58. | மட்டுப்படுத்தப்பட்ட மாமதல கூட்டுறவு சிக்கன கடனுதவு சங்கம் .. .. .. | 73.07.30 |
| 59. | மட்டுப்படுத்தப்பட்ட அறம்பொலவத்த மரவேலை கூட்டுறவுச் சங்கம் .. .. .. | 73.07.30 |

ஆர். பீ. இராசகுரு.
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்.
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்.

கூட்டுறவுத் திணைக்களம்,
த. பெ. இல. 419,
டியூக் வீதி,
கொழும்பு 1, 1973.09.18

10–83—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

### 1958 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலங்குகள் சட்டம்

கால்நடைகளுக்குக் குறிசுடல்—கரைவாகுப் பற்று.—அம்பாரை மாவட்டம்—1973

| கி. சே. இல. | கிராமசேவையாளரின் பிரிவு | குறிசுடும் திகதி | குறிசுடும் இடம் |
|---|---|---|---|
| 47 | சாய்ந்தமருது 6 ம் குறிச்சி | ஒவ்வொரு மாதமும் 1 வது புதன்கிழமை | கி. சே. வின் கந்தோர் |
| 47எ | சாய்ந்தமருது 4/5 ம் குறிச்சி | ஒவ்வொருமாதமும் 2 வது வியாழக்கிழமை | ஷை |
| 50 | சாய்ந்தமருது 2/3 ம் குறிச்சி | ஷை | ஷை |
| 52 | சாய்ந்தமருது 1 ம் குறிச்சி | ஷை | ஷை |
| 53 | சாய்ந்தமருது த. கு. | ஷை | ஷை |
| 54 | கல்முனைக்குடி 5 ம் குறிச்சி | ஒவ்வொருமாதமும் 1 வது வியாழக்கிழமை | ஷை |
| 55 | கல்முனைக்குடி 4 ம் குறிச்சி | ஷை | ஷை |
| 56 | கல்முனைக்குடி 2/3 ம் குறிச்சி | ஷை | ஷை |
| 58 | கல்முனைக்குடி 1 ம் குறிச்சி | ஷை | ஷை |
| 59 | கல்முனை 3 ம் குறிச்சி | ஒவ்வொரு மாதமும் 1 வது செவ்வாய்க்கிழமை | ஷை |
| 61 | கல்முனை 1/2 ம் குறிச்சி | ஷை | ஷை |
| 66 | பாண்டிருப்பு 1/2 ம் குறிச்சி | ஷை | ஷை |
| 62 | நாய்ப்பட்டிமுனை த. கு. | ஒவ்வொருமாதமும் 4 வது செவ்வாய்க்கிழமை | ஷை |
| 69 | சேனைக்குடியிருப்பு | ஷை | ஷை |
| 64 | நாய்ப்பட்டிமுனை மு. கு. | ஷை | ஷை |
| 67 | மருதமுனை 1 ம் குறிச்சி | ஒவ்வொருமாதமும் 3 வது செவ்வாய்க்கிழமை | ஷை |
| 68 | மருதமுனை 2 ம் குறிச்சி | ஷை | ஷை |
| 71 | பெரியநீலாவணை 1 ம் குறிச்சி | ஒவ்வொருமாதமும் 2 வது செவ்வாய்க்கிழமை | ஷை |
| 72 | பெரியநீலாவணை 2 ம் குறிச்சி | ஷை | ஷை |

டி. விஜயசிங்கா,
அரசாங்க அதிபர்,
அம்பாறை மாவட்டம்.

கச்சேரி,
அம்பாறை,
1973 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 25 ந் வ.

10–134—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

எல்ஈஜீ/எல்/400.

### தேசிய வீடமைப்புத் திணைக்களம்

1966 ம் ஆண்டின் 36 ம் இல். அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான (401 ம் அத்தியாயமான இ. ச. வா) தேசிய வீடமைப்பு அதிகாரச்சட்டத்தின் 76 ம் பிரிவின் கீழ் ஈடு வைக்கப்பட்ட காணியின் விற்பனையை

அதிகாரமளித்தல்

குறித்த தேசிய வீடமைப்பு சட்டத்தினதும் அதன் திருத்தங்களினதும் 9 (1) (ஆ) என்னும் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட தேசிய வீடமைப்பு உதவி ஆணையாளரான திரு. ரெஜிஸ் சுந்தரம் ஜோகேந்திரா ஆகிய நான், கீழ்க்காணப்படும் அட்டவணையைப் பின்வருமாறு வாசிப்பதற்கு, 1973 பெப்ருவரி 15 ம் தேதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானியிற் பிர சுரிக்கப்பட்ட ஏல விற்பனை அறிவித்தலை இத்தால் திருத்தம் செய்கின் றேன்.

ஆர். எஸ். ஜோகேந்திரா,
தேசிய வீடமைப்பு உதவி ஆணையாளர்.

தேசிய வீடமைப்பு திணைக்களம்,
சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தை,
கொழும்பு 2,
1973 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 17 ந் வ.

அட்டவணை

1. கிழக்குமாகாணம், திருகோணமலை மாவட்டம், திருகோணமலை நகரசபை எல்லைகளுக்குள்ளே திருகோணமலைப்பட்டினம் 3 ஆம் இல. பிரிவில் அமைந்துள்ள "புல்லுத்தோட்டம்" என்ற அக்காணி முழு மையின் பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான உத்தரவுபெற்ற நில அளவையாளரும் மட்டுப்படுத்துபவருமான திரு. ஆர். முருகுப் பிள்ளையினால் ஆக்கப்பட்ட 1966 மே 30 ம் தேதிய 807 ஆம் இல. வரைபடத்தில் கூறு "ஆ" கூறு "இ" ஐ வடக்கெல்லையாகவும், கொலொனியல் மோட்டோர்ஸ் கம்பனிக்குச் சொந்தமான காணியைக் கிழக்கெல்லையாகவும் கூறு "அ" வைத் தெற்கெல்லையாகவும் கப்பற் றுறை முற்ற ரோட்டை மேற்கெல்லையாகவும் கொண்டதும் பதினாறு தசம் நான்கு பேர்ச்சர்கள் (ஏ0. ரூ0. பே. 16.4) விஸ்தீரணம் கொண்ட துமான அக்காணித்துண்டு முழுமையும்.

2. கிழக்குமாகாணம், திருகோணமலை மாவட்டம், திருகோணமலை நகர சபை எல்லைக்குள்ளே திருகோணமலை பட்டினம் 3 ஆம் இலக்கப் பிரிவில் அமைந்துள்ளதும், சொல்லப்பட்ட 5 ஆம் கூறு 3 ம் கூறை வடக்கெல்லை யாகவும் 6 ஆம், 8 ஆம் கூறுகளைக் கிழக்கெல்லையாகவும், 7 ஆம் கூறைத் தெற்கெல்லையாகவும் திருகோணமலை கப்பற்றுறை ரோட்டை மேற் கெல்லையாகவும் கொண்டதும், 2 ரூட்.0 பே, விஸ்தீரணம் கொண்டதும், 148 ஆம் வரிமதிப்பு இல. கொண்ட "புல்லுத்தோட்டம்" என்றழைக்கப் படும் அக்காணியின் பிரிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட பகுதியான 5 ஆம் இல, கூறு அதன்கண் கட்டப்பட்ட 4 மாடி வீடுகளுடன் உத்தரவு பெற்ற அளவையாளரும் மட்டுப்படுத்துபவருமான திரு. எச். எல் மாட்டின்ஸ் டின் அவர்களால் ஆக்கப்பட்ட 1948 ஜனவரி 24 ஆம் தேதிய 96 ஆம் இல். வரைபடத்தில் 5 ஆம் கூறு எனக் குறிக்கப்பட்ட அக்காணித் துண்டு முழுமையும்.

10–1134—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

## "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள்

எல்டி. பி. 10/73

### மதுவரிக் கட்டளைச்சட்டம்

மதுவரி அறிவித்தல் இல : 696

**மோலேசஸ் சாராயத்தை உற்பத்தி செய்வதற்கும் மோலேசஸ் சாராயத்தை மொத்தமாக விற்பதற்குமான உத்தரவுப்பத்திரத்திற்கான படிவம்**

1964 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 7 ம் திகதிய 14,003 ஆம் இலக்கக் கசற்றில் வெளியிடப்பட்டதும் 1965 ம் ஆண்டு யூலை மாதம் 30 ம் திகதிய 14,464 ம் இலக்க கசற்றில் வெளியிடப்பட்ட 541 ம் இலக்க மதுவரி அறிவித்தலினால் திருத்தப்பட்டதுமான 524 ம் இலக்க மதுவரி அறிவித்தல் 1973 ம் ஆண்டு பங்குனி மாதம் 20 ந் தேதியி லிருந்து பின்வருமாறு மேலும் அதற்கான அட்டவணையில் திருத்தப்படவேண்டுமென, (52 ம் அத்தியாயமான) மதுவரிக்கட்டளைச் சட்டத்தின் 25 ம் பிரிவின் கீழ் நிதியமைச்சர் பணித்துள்ளார் :

(1) "மோலேசஸ் சாராயத்தை உற்பத்தி செய்வதற்கும் மோலேசஸ் சாராயத்தை மொத்தமாக விற்பதற்குமான உத்தரவுப்பத்திரம்" என்ற தலையங்கத்தின் கீழ் :

(அ) அவ்வுத்தரவுப்பத்திரத்தில் "சாராயத்தவறணைக் குத்தகைக்காரர் களுக்கு மட்டும்" என்னும் சொற்களுக்குப்பதிலாக "சாராயத் தவறணைக் குத்தகைக்காரர்களுக்கு" அல்லது "போத்தலில் மட்டும் சாராயத்தை விற்பதற்காக மதுவரி ஆணையாளரினால் வழங்கப்பட்ட விசேட உத்தரவுப்பத்திரங்களை வைத்திருக்கின்ற மற்றவர்களுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்,

(ஆ) நிபந்தனை 8 ல் "எவரேனும் குத்தகைக்காரருக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக சாராயத்தவறணைக் குத்தகைக்காரர் களுக்கு அல்லது "போத்தலில் மட்டும் சாராயத்தை விற்பதற்காக மதுவரி ஆணையாளரினால் வழங்கப்பட்ட விசேட உத்தரவுப் பத்திரங்களை வைத்திருக்கின்ற மற்றவர்களுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்,

(2) "மாற்று உடன்படிக்கை" என்ற தலையங்கத்தின் கீழ் :

(அ) அவ்வுடன்படிக்கையில் "சாராயத்தவறணைக் குத்தகைக்காரர்களுக்கு மட்டும்" என்னும் சொற்களுக்குப்பதிலாக "சாராயத் தவறணைக் குத்தகைக்காரர்களுக்கு அல்லது சாராயத்தைப் போத்தல்களில் மட்டும் விற்பதற்காகப் மதுவரி ஆணையாளரினால் வழங்கப்பட்ட விசேட உத்தரவுப் பத்திரங்களை வைத்திருக்கின்ற மற்றவர்களுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்,

(ஆ) நிபந்தனை 8ல் "எவரேனும் குத்தகைக்காரருக்கு" என்னும் சொற்களுக்குப்பதிலாக "சாராயத்தவறணைக் குத்தகைக்காரர்களுக்கு அல்லது போத்தல்களில் மட்டும் சாராயத்தை விற்பதற்கு மதுவரி ஆணையாளரினால் வழங்கப்பட்ட விசேட உத்தரவுப்பத்திரங்களையுடைய மற்றவர்களுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

செயலாளர்,
நிதியமைச்சு.

கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஒகத்து மீ 15 ந் உ.

10–14/1—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

எல். பி. 10/73

### மதுவரிக் கட்டளைச்சட்டம்

மதுவரி அறிவித்தல் இல. 607

(52 ம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 (1) ம் பிரிவுக்கான காப்புவாசகத்தால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு நிதியமைச்சர் நாணயக்கார பதிரகே மார்டின் பெரேரா ஆகிய நான் 1973 ம் ஆண்டு பங்குனி மாதம் 20 ந் தேதியிலிருந்து 1964 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 7 ம் திகதிய 14,003 ம் இலக்க கசற்றில் பிரசுரிக்கப்பட்ட 523 ம் மதுவரி அறிவித்தலுக்கான அட்டவணையிலுள்ள விதிகளை அதன் 18 ம் விதியில் "சாராயத்தவறணைகள்" என்ற சொற்களை உடனடுத்து, அல்லது "போத்தல்களில் மட்டும் சாராயத்தை விற்பதற்காக மதுவரி ஆணையாளரினால் வழங்கப்பட்ட விசேடசாராய உத்தரவுப்பத்திரங்களை வைத்திருக்கும் வேறு ஆட்களுக்கு" என்னும் சொற்களை உட்புகுத்துவதன் மூலம் இவ்வறிவித்தலினால் திருத்துகிறேன்.

என். எம். பெரேரா,
நிதியமைச்சர்.

கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஒகத்து மீ 15 ந் உ.

10–14/2—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்**

**01.12.1968 தொடக்கி அமுலுக்கு வந்தது**

# இலங்கைக் குடியரசு வர்த்தமானி

வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. சனிக்கிழமைகளில் மு. ப. 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. சனிக்கிழமைகளில் மு. ப. 11.00 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறெக்ராறுல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ¼ பக்கம் .. .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 01 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியுலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| இலங்கைக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | வெளியூர் | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 | 0 | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 | 0 | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 | 50 | 51 | 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை | | தபாற் செலவு (உள்ளூர்) | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 | 50 | 0 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 | 0 | 0 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 30 | 0 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 60 | 0 | 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க **அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஒற்ரோபர் .. | 5.10.73 | வெள்ளி .. | 28. 9.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 12.10.73 | வெள்ளி .. | 5.10.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 19.10.73 | வெள்ளி .. | 12.10.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 26.10.73 | வெள்ளி .. | 19.10.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| நவெம்பர் .. | 2.11.73 | வெள்ளி .. | 26.10.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| .. | 9.11.73 | வெள்ளி .. | 2.11.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 16.11.73 | வெள்ளி .. | 9.11.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 23.11.73 | வெள்ளி .. | 16.11.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 30.11.73 | வெள்ளி .. | 23.11.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| திசெம்பர் .. | 7.12.73 | வெள்ளி .. | 30.11.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 14.12.73 | வெள்ளி .. | 7.12.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 21.12.73 | வெள்ளி .. | 14.12.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 28.12.73 | வெள்ளி .. | 21.12.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆடு ஓகத்து மீ 18 ந உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.